விலை சதம் ...
★
பக்கங்கள் — 8

RECEIVED
1978-1-30
PERIODICALS DIVISION
LIBRARY · JAFFNA CAMPUS

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி
நூடில்ஸ், பொம்பே ...
றிக்கோ பீடா
வகைகளுக்கும்
றிக்கோ சுவீற்ஸ்
அன்
கிறீம் ஹவுஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

ஈழநாடு
வார மலர்
THE EELANAADU VAARAMALAR

"இக்கனமே இறந்த செல்வம்"
இக்கன சலவைக்கு
மில்க்வைற் பார் சோப்
வாங்கி உபயோகியுங்கள்.
பெரிய பார் சோப்பும்,
சிறிய பார் சோப்பும்
விற்பனையாகின்றது.
2 மேலுறைகளை அனுப்பி
காந்திக் கலண்டரை
அல்லது
மில்க்வைற் செய்தியை
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்,
யாழ்ப்பாணம்

மலர் 19 | தை 16 | ஸபர் 19 | ஞாயிற்றுக்கிழமை | [29—1—78] | இதழ் 350

# பொத்துவில் கனகருக்கு அவசர சத்திரசிகிச்சை! குணமடைகிருர்

## இரு ரவைகள் உடலிலிருந்து மீட்பு!

(கொழும்பு)

**துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பொத்துவில் எம். பி. திரு. எம். கனகரத்தினத்தின் உடலிலிருந்து நேற்று இரண்டு துப்பாக்கி ரவைகள் எடுக்கப்பட்டன.**

**டாக்டர்களின் தீவிர கண்காணிப்பில் இருக்கும் இவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.**

திரு. கனகரத்தினத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட செய்தி நேற்றைய 'ஈழநாட்டுப்' பத்திரிகையில் வெளிவந்திருந்தது வாசகர்கள் தெரிந்ததே.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரை நடைபெற்ற சத்திரசிகிச்சையில் இவ்விரு ரவைகளும் எடுக்கப்பட்டன. இன்னும் ரவைகள் அவரின் உடலில் இருப்பதாகவும் திரு. கனகரத்தினத்தின் உடல்நிலை பலவீனமடைந்திருப்பதால் மற்றைய ரவைகளை எடுப்பதற்கான சத்திர சிகிச்சையை உடன் மேற்கொள்ள முடியாமலிருப்பதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலையும் அவர் சிறிது மயக்கமுற்ற நிலையிலிருந்த போதும் அவருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது என்றும் டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

### எவரும் கைதாகவில்லை

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிசார் தொடர்ந்து தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் ஒரு தீவிரவாத ... இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென்று பொலிசார் நம்புகின்றனர். [ம]

# நெல்லியடியில் கடை அடைப்பு

[நெல்லியடி]

கல்வி அமைச்சர் நிசங்கா விஜயரத்னவின் வடமராச்சி பகுதி விஜயத்தைப் பகிஷ்கரிக்கும்பொருட்டு நெல்லியடி பகுதியில் நேற்று சகல கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன.

ப. நோ. கூ. சங்க கடைகள் மட்டுமே திறந்திருந்தன. இந்தப் பகிஷ்கரிப்பு இயக்கத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் தமிழ் இளைஞர் பேரவையினரும் முன்னணியில் திகழ்ந்தனர்.

கடைஅடைப்பிலீடுபட்டிருந்த தமிழ் இளைஞர்களை சந்தித்த உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு' ஜீ. ராஜலிங்கம் இளைஞர்கள் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் இந்த உணர்ச்சியினால் வெறும் ஆவேசத்திற்கு இடமளிக்கக்கூடாது என்றும் இந்த உணர்ச்சிகளை நாம் தக்க சமயத்தில் பயன்படுத்துவோம் என்றும் வேண்டிக் கொண்டார்.

இக்கடையடைப்பில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த எதிர்சுந்தரம் என்ற இளைஞர் நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மாலையில் உடுப்பிட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். தொழில்நுட்ப நிறுவனம் விரைவில் தரம் உயரும்

## அமைச்சர் உறுதி

(திருநெல்வேலி)

யாழ். பல் தொழில் நுட்ப நிறுவனம் விரைவில் தொழில் நுட்பக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்படுமென கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின உறுதியளித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள் நேற்று கல்வி அமைச்சரை சந்தித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

நல்லூர்த் தொகுதி ஐ. தே. க. வாலிப முன்னணி செயலாளரும் தொழில் நுட்பநிறுவன முன்னாள் வணிக மாணவர் மன்றத் தலைவருமான திரு ஜே. என். பி. பாக்கியராஜா சமர்ப்பித்த மகஜருக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

1958-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியின் தராதரப்பத்திரத்திற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தகுந்த இடம் அளிக்கப்படவில்லை என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடபிரதேச ஐதேக செயலாளர் திரு. எம். அமிர்தலிங்கம் தலைமையில் நேற்று யாழ் நகரில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது அரசியல் எதிரிகள் எமக்கு என்ன தீமைகள் தான் செய்தாலும் எமது தலைவர் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையிலான தார்மீக அரசு எவருக்கும் நன்மையே செய்யும். வடக்கில் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியினரின் காதைக்கடிக்கின்றார்கள் என அறிகிறேம் அவற்றுக்கு விரைவில் முடிவு காணப்படும்.

ஜனுப் எம். எம். முத்து ராஜாவின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது

[8ம் பக்கம் பார்க்க]

# "ஐக்கிய இலங்கையை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும்"

கல்வி அமைச்சர் நேசக்கரம்

## 'தனிநாட்டின் அவசியத்தை வலியுறுத்தியவர் இக்பால்'

— எதிர்க்கட்சித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

**'கவிஞர் இக்பாலின் இலட்சியத்தைப்பின்பற்றி இந்நாட்டில் ஐக்கியத்தை உருவாக்க நீங்கள் அனைவரும் முன்வரவேண்டும். இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவராக அவர் விளங்கினர். அதேபோன்று நாமும் ஐக்கியப்பட்டு வாழவேண்டும்.'**

யாழ். ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கவிஞர் இக்பால் நூற்றாண்டு விழாவில் பேசிய கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜரத்தின மேற்கண்டவாறு கூறினர்.

சட்டத்தரணி எம். எம் மன்சூர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்வி அமைச்சர் மேலும் கூறியதாவது:-

கவிஞர் இக்பால் உலகச் சிறப்புப்பெற்ற மகாகவியாக விளங்கினர். இன, மத, மொழி எல்லைகளுக்கு அப்பாற்பட்டவராக என்றும் மனித குலம் அனைத்தினாலும் போற்றப்பட்டவராக உயர்நிலை அடைந்த உத்தமராக அவர் வாழ்ந்

[8-ம் பக்கம் பார்க்க]

CIC
சி.ஐ.சி.
ஸ்தாபனத்தாரின் தரமான விவசாய கிருமிநாசினிகளை
கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள
ஸ்தாபனத்தாரின் யாழ்ப்பாண மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான
எம்மை நாடுங்கள்
த ரோரு லிமிட்டெட்
32, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 7651

## சென்னை திரைப்படவிழாவில்

# பரபரப்பேற்படுத்திய சில வெளிநாட்டுப் படங்கள்

(நமது சென்னை நிருபர்)

சென்னையில் நடந்த திரைப் படவிழாவில் மிகப்பெரிய பரபரப்பை உண்டாக்கியுள்ளன சில திரைப்படங்கள். பிலிமோற்சவா 78 என்று இந்தியில் அழைக்கப்பட்ட இந்த உலகத் திரைப்படவிழா ஜனவரி 17ம் திகதி வரை நடைபெற்றது.

இவ்விழாவில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ் சுவீடன், அல்ஜீரியா, இலங்கை உட்பட 38 நாடுகளைச்சேர்ந்த பல்வேறு திரைப்படங்கள் திரையிடப்பட்டன. எந்தத் திரைப்படமும் ஒரே ஒருநாள் மட்டுமே திரையிடப்பட்டது. மறுநாள் வேறுபடம். ஒருபடத்தைப் பார்க்கத்தவறிஞல்பிறகு பார்க்கவே முடியாது என்ற நிலை எனவே மக்கள் தங்கள் அன்றாட வேலைகளைக் கூட மறந்து இனிமாடிக்கட்டுக்காக அலைந்ததைக் காணமுடிந்தது. அப்படி என்னதான் இருந்தன அந்தச் சில படங்களில்? நம்முடைய படங்களில் காணக் கிடைக்காதவை பலஇருந்தன. மிகவும் கொடுமையான குற்றங்களும்-ஆபாசமான படுக்கையறைக் காட்சிகளும் நிறைந்திருந்தன. உதாரணமாக ஒரு கற்பழிப்புக்காட்சி வருகிறதென்று வைத்துக் கொள்வோம். வில்லன் கதாநாயகியை முழு நிர்வாணமாக்குவதிலிருந்து கற்பழித்தபிறகு தன்னுடைய உள்ளாடைகளை அணிந்துகொள்வது வரை நேருக்குநேராக அப்படியே காட்டுகிருர்கள். பெண்களின் உடலில் எங்கேயும் மறைக்காமல் அப்படியேகாட்டினர்கள்.

திரைப்படவிழாவில் இடம் பெற்ற மேலை நாட்டின் எந்தப் படமும் தணிக்கை செய்யப்படாதவை. எனவே மக்கள் இக்காட்சிகளைப் பார்க்கப் பேயாய் அலைந்ததில் வியப்பில்லை. இந்தியாவின் பலமாநிலங்களிலிருந்தும் மக்கள் ஓடி வந்தனர். ஒரு டிக்கட் 150 ரூபாய்வரை கள்ளமார்க்கெட்டில் விற்றது. இப்படங்களைப் பார்க்க ரசிகர்கள் மட்டுமல்ல நடிகர்-நடிகைகள், டைரக்டர்கள், படஅதிபர்கள் ஆகியோரும்போட்டிபோட்டனர்.

இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு மொழிகளில் நடிக்கும் நடிகர்கள் அனைவரும் அப்போது சென்னையில் தான் இருந்தனர் என்ருல் அந்தப் படங்களின் மகிமை என்ன என்று தெரிந்துகொள்ளுங்களேன்.

உலகத் திரைப்படவிழாவில் இடம்பெறும் திரைப்படங்களில் நடித்த நடிகர்கள், டைரக்டர்களும் வெளிநாடுகளில் இருந்து சென்னை வந்திருந்தனர். இதைத்விர இப்படங்களைப் பார்ப்பதற்காகவே வெளிநாடுகளில் இருந்து ரசிகர்கள் வந்திருந்தனர்.

நடிகை லட்சுமியும் டைரக்டர் பாலச்சந்தரும் தவருமல் தினமும் சினிமா பார்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இப் படங்களில் உள்ளதை ஆபாசம் என்ற கண்ணோட்டத்தில் ஏன் பார்க்கவேண்டும்? அந்தக் காட்சிகளில் என்ன தவறுஎன்று லட்சுமி கேட்கிருர். இப்படங்களால் யாருக்கு அனுகூலமோ இல்லையோ ஒட்டல்காரர்களுக்கு நல்ல வருமானம் சென்னையில் தங்க எங்கும் இடம்கிடைக்கவில்லை. எந்த தியேட்டரிலும் டிக்கட் கிடைக்கவில்லை. சென்னை நகரில் மட்டும் மொத்தம் 71 தியேட்டர்கள் உள்ளன.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

2 அங்குல ஆல்கில் தண்ணீர்பம் ஒரு வருஷம் பாவித்த, நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. ச. சிவபாதம், கலட்டி வளவு, புலோலி தெற்கு, புலோலி. 8356

பெருந்தொகையான மரவள்ளித்தடிகள் கோப்பாயில் உள்ள ஒரு தோட்டத்தில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மா. கிருஷ்ணசாமி, ரோசாப்பூக்கடை 240, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8347

தென்னைகளும் தரிசுநிலமும் கொண்ட மனை பெரியமாசார் தோட்டம் 31 ஏக்கர் விற்கப்படும். கண்டி வீதியிலிருந்து முக்கால் மைல் தொலை தொடர்பு: ஆர். ஜெகேந்திரன், 102 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 8355

பலாலிவீதியில் திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு அருகாமையில் 3½ பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 682, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 8333

இளம் தென்னம் தோட்டம் வங்களாவுடன் இயக்கச்சி (பளையிலிருந்து 4 மைல்). L R C. அனுமதிக்கப்பட்டுள்ளது. டாக்டர் பிளாக், 65, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 8276

### விற்பனைக்கு

24 சிறி றேடியேற்றர், 2 சிறி பி. எஸ். ஏ. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு சாமிகுரூஜ், அராலி ரோட், ஓட்டுமடம். 8364

### தேவை

யாழ்ப்பாணம் நகரசபை எல்லைக்குள் சகல வசதிகளும் உள்ள தனிவீடு வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு C. சிவஞானசுந்தரம், மக்கள் வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7614 8352

ஹோட்டலில் சகல வேலைகளுக்கும் ஆள்தேவை. நேரில் வரவும். சந்திரகுமார், 68/5 இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். 8344

பா ஓடுவதில் நன்கு அனுபவமுள்ள நெசவு ஆசிரியை அல்லது பா ஓடுவதில் 5 வருட அனுபவமுள்ள பெண் நெசவாளர் தேவை. நேரில் வரவும். இல. 4 மவுண்காமல் வீதி, யாழப்பாணம். 8345

ஆங்கிலத்தில் கணக்கு எழுத அனுபவம் வாய்ந்த 30 வயதிற்கு மேற்படாத விற்பனையாளர் (Salesman) பதவிக்கு ஆள் தேவை. 31-1-78க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், 6/8, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8348

### கல்வி

பிராஜ்மல் லேர்ணரி, தெல்லிப்பளை (கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில்) ஆங்கிலம், தட்டெழுத்து, விஞ்ஞானம், பாலர் வகுப்புகள் மாசி 1-ம் திகதி ஆரம்பமாகும். சுருக்கெழுத்து ஆசிரியருக்கு வெற்றிடமுண்டு. 8335

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று இலக்கணம் இலக்கியம் (Literature) புத்தக சேவை (Library Service) (ஆங்கிலப்பேச்சு (Spoken English) பொது அறிவு கற்றுக்கொடுப்பார்கள். மத்திய ஸ்தலத்திற்கு வருபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8258 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8258

இரத்தினக்கல்லியல் விஞ்ஞான ரீதியில் இனங்காணுதல், விலைமதிப்பிடுதல், வியாபாரம், பட்டைதீட்டல் என்பன பட்டதாரிகளால் கொடுக்கப்படுகின்றன தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாணக் கல்விநிலையம் (சாந்தி சினிமாவுக்கு முன்பாக) 8341

### பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I. (London) பரீட்சைக்கு சமனான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு, அதிபர் இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8307

## அறிவித்தல்

எங்கள் விற்பனைப் பிரதிநிதியாக இருந்த **திரு. விசுவநாதன் பாலசுப்பிரமணியம்** என்பவர் 12-1-78 முதல் எங்கள் தொழிலகத்தில் வேலைசெய்வதில்லையென்றும், அவருக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் விற்பனையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

க. கனகராசா
தொழிலதிபர்
மில்க்வைற் தொழிலகம்

8353

## இலங்கை ரசிகர்களின் ஒத்துழைப்பைக்கோரும் இந்திய தயாரிப்பாளர்

(நமது சென்னை நிருபர்)

இலங்கையில் சிலகாட்சிகளை எடுக்கவிருக்கும் இந்திய படத் தயாரிப்பாளர் லட்சுமணன் படப்பிடிப்புஇனிதுநடைபெற இலங்கை ரசிகர்கள் ஒத்துழைக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையைச் சேர்ந்த சுப்பு புரொடக்ஷன்ஸ் பிரம்மாண்டமான முறையில் ஏராளமான பணச்செலவில் 'வருவான் வடிவேலன்' என்ற தமிழ்ப்படத்தைத்தயாரித்துவருகின்றனர். முருகக்கடவுளின் அருள் பெற்று துன்பங்கள் நீங்கி வாழும் சிலகுடும்பங்களை சித்தரிக்கும் கதையம்சம் கொண்ட இந்தப்படத்தில் ஜெயகணேஷ்-லதா ஜோடியாக நடித்துவருகிருர்கள். மற்றும் முத்துராமன் - விஜயகுமார் - நம்பியார்-நாகேஷ்- தேங்காய் சீனிவாசன்-திருச்சிசௌந்தரராஜன்-ஐசரிவேலன்-கே. கண்ணன்-வி. கோபாலகிருஷ்ணன் -வி. எஸ். ராகவன்- ஜெயசித்ரா-படாபட் ஜெயலட்சுமி, மனோரமா மற்றும்பலர்நடித்து வருகிருர்கள்.

தமிழ்நாட்டிலுள்ள முருகனின் அறுபடைவீடுகள் அனைத்திலும் படப்பிடிப்பு நடக்கிறது. இது தவிர வெளிநாடுகளிலும் உள்ள கோயில்களில் படப்பிடிப்பு நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியாவில் படப்பிடிப்புநடத்திவிட்டு அங்கு விஜயகுமார்-நாகேஷ் - படாபட் ஜெயலட்சுமி ஆகியோர்நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன.

இதையடுத்து பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அளவில் இலங்கைக்கும் படப்பிடிப்புக் குழுவினர் வருகின்றனர். கண்டி, கதிர்காமம் ஆகிய இடங்களில் படப்பிடிப்புநடத்தத் திட்டமிட்டுள்ளனர். கோயில்களில் நடைபெறும் விழாக்களும்படமாக்கப்படும்.

இந்தப்படத்தில் மற்றொரு விசேஷம் என்னவென்ருல் கோயில்சம்பந்தப்பட்டகாட்சிகள் அனைத்தையும் செட் போடாமல் சிரமத்தைக்கருதாமல் கோயில்களிலேயே எடுப்பதுதான். இப்படப்பிடிப்புக்கு இலங்கை ரசிகர்கள் தகுந்தபடி ஒத்துழைத்து படப்பிடிப்பு இனிதுநடைபெறஒத்துழைக்க வேண்டும் என்று ஈழநாட்டின் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன் என்று தயாரிப்பாளர் லட்சுமணன் செட்டியார் கூறினர்.

## பகை காரணமாக தாக்கப்பட்டாராம்

[நெல்லியடி]

குடும்பப்பகை காரணமாக 35வயது குடும்பஸ்தர் ஒருவர் பொல்லிஞல் படுமோசமாகத் தாக்கப்பட்டாராம். அவக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மேற்படி சம்பவம் பருத்தித்துறை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த அல்வாய் மேற்கில் இடம் பெற்றுள்ளது. சந்தேக நபரான குணராஜா என்பவரை பொலிஸார் தேடி வருகின்ருர்கள் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## ஸ்ரீகாந்தம் சகோதரிகளின்

# வழுவூரார் கலாநிலையம்,

### யாழ். கிளை

எதிர்வரும் 4-2-78 சனிக்கிழமை மாலை எமது யாழ். கிளை நல்லூர், 23, வைமன் வீதியில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும். பழைய மாணவ மாணவிகளையும் மற்றும் இக்கிளையில் பயிற்சிபெற விரும்பும் மாணவ மாணவிகளையும் அழைக்கின்ரேம்.

ஸ்ரீகாந்தம் சகோதரிகள்

8339

## அறிவித்தல்

சிறீலங்கா அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற வடமாகாண விநியோகஸ்தர்களாக நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதைப் பொதுமக்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிரேம்.

கீழ்க்காணும் பொருட்கள் தற்போது மிக மலிவான விலையில், ஓர் குறைந்த தொகை வந்துள்ளது.

- பெற்ரேல்,மாக்ஸ் அரிக்கன் லாம்புகள் அதன் சிமினிகள் திரிகள், மான்ரில்கள்
- கத்திரிக்கோல்கள் (பூவேலைக்காகவேண்டியவை)
- மோட்டார் றிவைன்டிங் செப்புக் கம்பிகள் வேறு பல அவசிய பொருட்களும்

# இம்மா என்ரர்பிறைசஸ் லிமிட்டெட்

பொருட்கள் கிடைக்குமிடம்:
17, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்
தொலைபேசி இல 7566

8354

## நன்றி நவிலல்

### ஆ. க. ஆறுமுகம்தம்பி

திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி (கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியை) யும் அவருடைய குடும்பத்தினரும் மருதானை புகையிரதநிலைய அத்தியட்சகர் ஆ. க. ஆறுமுகம்தம்பி அவர்களின் ஈமச்சடங்குகளில் கலந்துகொண்ட உறவினர்கள், நண்பர்களுக்கும்-குறிப்பாக புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், மலர்வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தங்கள் மனமார்ந்த நன்றியையும் அதனைத் தனித்தனியே தெரிவிக்க இயலாமைக்கு வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிருர்கள்.

274, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 8360



# பிராயச்சித்தம்

கண. மகேஸ்வரன்

(1)

ரோஜாவின் மெல்லிதழ்களை ஸ்பரிசித்த வண்ணம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள் சாவித்திரி.

அந்தமலர்ப்பூங்காவில்வீசிய இளந்தென்றல், அவள் நெஞ்சத் தளத்தில் கற்பனைக்கோட்டைகளை எழுப்பியிருக்கவேண்டும்.

''சாவி, தனியாக என்ன யோசனை? படம் பார்க்கப் போவோமா?'' என்று சிவராமன் அழைத்ததுகூட அவள் செவிக்கு ஏறவில்லை.

''சாவி...!'' என்று கனிவாஞ்சையுடன் அவள் தோளை தொட்டான் சிவராமன்.

திகைப்போடு திரும்பிய அவளின் பார்வை, சிவராமனின் பார்வையைச் சந்தித்ததும் மண் கவ்வியது.

''என்ன சாவி, இப்படியே வெட்கப்பட்டுக் கொண்டிருந்தால் எப்படி? ஏதாவது படம் பார்க்கப்போவோமா?'' என்றான் சிவராமன்.

அவளோடு ஜோடி போட்டு எங்காவது குஷியாகக் கிளம்ப வேண்டுமென்றது அவன் மனம்.

''சின்னப்பிள்ளை மாதிரி என்ன அவசரம்? இப்பதான் எழுத்து முடிஞ்சிருக்கு. தாலி இல்லாமல் என்னாலே வெளிக்கிட ஏலாது''.

—அவள் செல்லமாகக் குழைந்தாள்.

''ஓஹோ...ஹோ...'' என்று அட்டகாசமாகச் சிரித்தான் சிவராமன்.

''ஏன் சாவி, உனக்கும்எனக்கும் தான் பொருத்தமென்று அந்த இறைவனே எழுதிவைச்சிட்டான். நீதான் என்மனைவியென்று இந்த ஊருக்கு எப்போதோ தெரியுமே! இன்னும் நீ அடம்பிடிக்கலாமா'' என்று அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளிவிட்டான் அவன்.

''ஐயையோ வலிக்கிறதே!'' என்ன் நெற்றியைச் சுருக்கி நெளிந்தாள்.

''சரி அதுதான்போகட்டும். நான் கேட்பதற்குச் சரியான பதில் வேண்டும். தெரிஞ்சுதா?'' என்றான் அவன்.

அவள் மௌனமாகத் தலையசைத்தாள்.

''சாவி! சாவி! எத்தனையோ பேர் படிச்ச வகுப்பிலே உனக்கு என்னை மட்டும் ஏன் பிடிச்சுது சாவி?'' என்றான், அர்த்தமுள்ள ஒரு சிரிப்புடன்.

''இப்பிடிக் கேட்டுக்கேட்டுப் பதில் சொல்லி அலுத்துப் போச்சுது''—அவள் நாணத்துடன் தலை கவிழ்ந்தாள்.

''சாவி...ப்ளீஸ்சாவி! இன்று மட்டும் ... எனக்குச் சரியான காரணத்தைச் சொல்லு சாவி!''

அவனைப் பார்க்கஅவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

அவள் சொன்னாள்—

''உங்கள் குணம் எனக்குப் பிடிச்சுது''.

''அதென்ன குணம்...''

''பிடிவாத குணம்...''

''அதெப்படி...?''

''ஊ ஹூம் ... சின்னப் பிள்ளை''

''இம்மட்டுச் சின்னனா...?''—அவன் தனது கைகளை ஒடுக்கிக் குவித்துக்கேட்டான்.

அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''திரும்பத் திரும்பக் கேட்கக் கூடாது. இன்று மட்டும்தான் சொல்லுவேன், புரிஞ்சுதா?''

'ஆம்' என்ற பாவனையில் அவன் தலையசைத்தான்.

''இது மனிதபலவீனம்தான் சாவி! உன் அழகுதான் என்னை முதலில் கவர்ந்தது. அதன் பிறகுதான் உனது குணமும் எனக்குப் பிடிச்சுது. உன்னை அடையவேண்டுமென்றுநினைச்சன். உனக்கு என் குணம்தானே முதலில் பிடிச்சுது. என் அழகைப் பற்றி நீ நினைச்சுக்கூடப் பார்க்கயில்லை. பெண்கள் சுபாவம் அப்பிடித்தான் போலும்! ஏதோ ஒரு புத்தகத்திலை படிச்சன். 'ஆண்கள் அழகைத்தான் விரும்பி ரசிக்கிறார்கள். பெண்களோ அவர்களுடைய குணத்தைத்தான்எடைபோடுகிறார்கள்' என்று. இதற்காக உன்னை நான் கோபிக்க மாட்டேன் சாவி!''

அவன் அவளது கரங்களை இறுக்கமாகப் பற்றினான்.

அவளுக்குக் கண்ணீர்திரம்பி வழிந்தது.

''உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன்''-அவள் உருக்கமாகச் சொன்னாள்.

''அப்பிடிச் சொல்லாதே சாவி! உன்னைக்கண்கலங்காமல் பார்க்க வேண்டிய நானே உன்னை அழவைத்துவிட்டேனே!''

அவன் தாயின் வாஞ்சையோடு அவள் கண்களைத் துடைத்துவிட்டான்.

''என்ன இருந்தாலும் நான் அப்பிடிச் சொல்லியிருக்கக் கூடாது. அது என்னுடைய பிழைதானே. எங்களோடு படிச்சவையிலை பாதிக்கும் மேலானவர்கள் குடித்தும் புகைத்தும் கும்மாளமடிக்கும் போது என்தெய்வத்தின் கால்களில் நான் பூப்போட்டுக் கும்பிடவேண்டும்.''

அவள் அவன் கால்களில் துவண்டாள்.

அவன் முகத்தில் பழையபடி அமைதி நிலவியது. பழைய சிவராமனாக நொடிக்குள் மாறி விட்டான்.

''சாவி...கிரிசாவி ... கிரி...'' என்று அவன் இடையில்கிள்ளி விட்டான்.

''வகுப்பிலே பெண்கள் மாதிரி நீங்க அடக்க ஒடுக்கமாய் வந்திருப்பீங்க. கண்டபடி கதைக்கமாட்டீங்க. ஆனால் படிப்பில் மட்டும் விட்டுக் கொடுக்கமாட்டீங்க. உங்க அமைதியான குணமும் நடையும்தான் எனக்குப்பிடிச்சுது!'',

''அப்ப என்னைப் பிடிக்கல்லே...?''

''ஐயையே... இந்தக் கரிமூஞ்சிக்கு அதுதான் ஒரு கேடு...?'' — அவள் பகிடியாகத்தான் கேட்டாள்.

அவன் முகம் சட்டென்று மாறிவிட்டது. அதை அவளும் அவதானிக்கத் தவறவில்லை. அவளுக்கு உள்ளம் இலேசாக நடுங்கியது.

''என்னை மன்னியுங்கோ, நான் சும்மா...'' அவளுக்கு வார்த்தைகள் வரமறுத்தன.

அவன் வலுக்கட்டாயமாகச் சிரித்தான்.

அவளும் தன்னை மறந்து சிரித்தாள்.

●

அந்தப் பழைய காட்சியை இரைமீட்டுப் பார்த்தாள் சாவித்திரி. அவளுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

'ஐயோ தெய்வமே' என்று தலையிலடித்துக் கொண்டாள.

கணவனின் கால்களை மெல்ல வருடிக்கொண்டிருந்தவளால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் அழுத கண்ணீர் மணித்துளிகளாக அவன் கால்களில் விழுந்து சிதறிக்கொண்டிருந்தது.

●

(2)

சிவராமன் இப்போதெல்லாம் வெகுவாக மாறிவிட்டிருந்தான்.

தன்னைவிடக் குடிகாரன் உலகத்தில் வேறெவனும் இருக்கவே கூடாது என்பதுபோல் சாராயத்தை நீராக வயிற்றில் ஊற்றிக் கொண்டிருந்தவனின் உள்ளத்தில். இப்பொழுது தான் சற்றுத் தெளிவுபிறந்திருக்கவேண்டும்.

தன்னை நம்பி வந்த மனைவிக்கு தானிழைத்த அநீதிகளையும், தன்மேல் என்றும் பிரியமான மனைவியின் செய்கைகளையும் சீர்தூக்கி ஆராய இப்பொழுதுதான் அவனுக்கு நேரம் கிடைத்தது.

தான் மிதமிஞ்சிய மது போதையில் வந்து என்னென்ன திட்டிப் பேசினாலும் அடித்தாலும் உதைத்தாலும், அவள் யாரிடமும் தன்னைப் பற்றிக் குறை சொல்வதில்லை என்பதை அறிந்ததும் அவன் மனம் வேதனையால் துடித்தது.

இப்படி ஒரு சந்தர்ப்பம் அவனுக்குக்கிடைத்திராவிட்டால், அவள் தன்னால் பட்ட துன்பத்தைக்கூட அவன் தெரிந்திருக்க நியாயமில்லையே!

●

மரண விசாரணை அதிகாரியின் முன் கூனிக் குறுகி அடக்க ஒடுக்கமாக நின்ற கோலத்தைப் பார்த்தால், அவனைக் குற்றவாளியாக யாராலுமே கருதமுடியாததுதான்.

ஸ்தலத்தில் குழுமியிருந்த மக்களிடையே - பொலிசாரின் மத்தியில் நின்ற சாவித்திரி யாருக்கும் தெரியாமல் கணவனை ஒரு முறை பார்த்தாள். திரும்பிச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தாள். இறந்து கிடக்கும் பால் மணம்மாறாத தன் பச்சைக் குழந்தையும் பார்த்தாள்.

அவளால் சகிக்கமுடியவில்லை 'ஓ' வென்றலறிவிட்டாள்.

வாக்குமூலம் பதிவுசெய்யப் பட்டது.

அவள் கூறினாள்—

'என் குழந்தையை யாரும் வேண்டுமென்று கொல்லவில்லை. இவர் ஏதோ கோபத்தில் என்னை அடிக்கவந்தார். அதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஏனென்றால் நான் அவரது பெண்டாட்டி. நான் விலக முயன்றபோது குழந்தை தவறி முகம் குப்புற விழுந்துவிட்டது. கீழே இருந்த கல்...' அதற்கு மேல் அவளால் விபரிக்க முடியவில்லை.

அவள் மனச்சாட்சி அவளைக் கொல்லாமல் கொன்றது.

சாகடிக்கப்பட்ட குழந்தைக்காகப் பரிந்து பேசி கணவனைத் தண்டனைப்படுத்தி தானும் நரக வேதனை அனுபவிப்பதைவிட, வாழவேண்டிய தன் கணவன் திருந்த ஒரு வழி கிடைக்காதா என அவள் பெண்ணுள்ளம் ஏங்கியது,

'என்னால்தானே என் பிள்ளை செத்தது. ஐயோ நான் என்ன செய்வேன்...?' கேவிக் கேவி அழத்தொடங்கிவிட்டாள் சாவித்திரி.

(7-ம் பக்கம் பார்க்க)

**இன்பம் மட்டுமே நிறைந்த வாழ்க்கை சப்பென்றிருக்குமென்றுதான், ஆண்டவன் சில கஷ்டங்களையும் கொடுக்கிறான் போலும்! இதனால் சிலகசப்பான- ஜீரணிக்க முடியாதவிஷயங்களைக் கூட அனுபவிக்க வேண்டுமா- என்ன?**

---

## இரு 'மினி' வித்துவான்கள்

சங்கீத சீஸன் காலத்தில் தமிழகத்திலிருந்து வரும் ஆனந்தவிகடன் சஞ்சிகையில் வந்த ஒரு செய்தி இது.

சென்ற வாரம் மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் நாதோபாசனா ஏற்பாடுசெய்திருந்த ஒரு நாதஸ்வரக் கச்சேரிக்கு வந்திருந்த எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சொன்னால் நம்பமாட்டீர்கள். மேடை மீது இரு சின்னஞ்சிறுவர்கள் நாதஸ்வரத்தைக் கையில் வைத்துக்கொண்டு புகுந்து விளையாடினார்கள், அபார வாசிப்பு

அன்று கச்சேரி செய்த திருப்பாம்புரம் நாதஸ்வர மாஸ்டர்கள் டி. கே. எஸ். மீனாட்சி சுந்தரனாரின் சங்கீதப்பரம்பரையில் வந்தவர்கள். 'மேடையில் இரட்டை நாஸ்வரம் வாசிக்கும் பழக்கமே இவர்களுடைய வம்சத்தில் தோன்றியதுதான்' என்றார் இவர்களுடைய தந்தை திரு. சிவசுப்பிரமணியம். இவரும் ஒரு நாதஸ்வர வித்வான்.'

சுவாமிநாதனுக்கு வயது பதினொன்று. ஆறுவதோடு பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு பழனி நாதஸ்வரப் பள்ளியில் மூன்று வருடங்கள் இசையைப் பயின்றிருக்கின்றான். தம்பி மீனாட்சிசுந்தரத்திற்கோ எட்டு வயதுதான் ஆகிறது. எழுந்து நின்றால் நாதஸ்வரத்தின் உயரம் அவனுடைய தோள்பட்டைக்கு வரும்[ நன்னிலம் தாலூகாவில் திருமீயச்சூர் பஞ்சாயத்துப் பள்ளியில் ஐந்தாவது வகுப்பில் படிக்கின்றான் மீனாட்சிசுந்தரம். இவனுக்கு ரொம்பவும் ஒடிசலான உடம்பு. நாதஸ்வரத்தோடு உடம்பும் நிறைய 'ஊத'வேண்டும். இரண்டு சிறுவர்களும்நாதஸ்வரத்தை நாலு திசைகளிலும் சுழற்றி வாசிக்கும் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

சகோதரர்கள் இருவரில் சின்னவன் சிவந்தகலர். பெரியவனுக்கு ஒரு குட்டிவித்வானின் அமைப்பு நிறைய இருக்கின்றது. மூன்று கட்டை சுருதியில் திமிரி நாதஸ்வரத்தை இவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

நாதஸ்வரத்துக்கே ஒரு சாபக்கேடு. கிணற்றுக்குள் எரியும் குத்துவிளக்கின் நிலைதான். சீக்கிரத்தில் பெயர் எடுத்துவிட முடியாது. சுவாமி புறப்பாடுகளுக்கும், திருமண அழைப்புகளுக்கும் நிறைய வாசிக்கும் திருப்பாம்புரம் மாஸ்டர்களுக்கு விளம்பரமே கிடையாது. முழுக்க முழுக்க உழைப்பாலும். திறமையாலும் மட்டுமே முன்னுக்கு வரவேண்டும்.

வரவிடுவார்களா?

—வீயெஸ்வி

நன்றி: ஆனந்தவிகடன்.

---

உருவகக்கதை

## யாருக்காக!

— காவலூர் எஸ். ஜெகநாதன்

திருமணவீடுகளை இழக்கத் தொடங்கிவிட்டது. சாப்பிட்டு முடிந்ததும் உறவினர்கள் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள். சற்று முன்னர் மக்கள் நிறைந்திருந்த மணப்பந்தலில் ஒரேயொரு நாய் மட்டும் நிலத்தைப் பிறாண்டிக்கொண்டு கிடக்கிறது. உறவினர்கள் வந்த வேலை முடிந்ததும் தம் பாட்டில் கலைந்துவிட்டார்கள். ஆனால் அங்கே பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளின் அலங்கார ஜோடனை இன்னும் கலையவில்லை. இரவு நகர்ந்துகொண்டிருந்தது.

புதுமணத்தம்பதிகள் உள் வீட்டில் இருந்த கட்டிலில் வந்து அமர்ந்துகொண்டார்கள். நிமிடங்கள் கரைந்து கொண்டிருக்க தம்மை மறந்து ஏதோ கதைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பப்பா எத்தனை விரசம்? எத்தனை சரசம்? கட்டிலுக்கு நேராக இருந்த மின்விளக்கு புலலரித்தது, புரியாத உணர்ச்சிகள் அதன் மனதில் பேதலித்தன. உண்டான குஷியில யாருடனாவது சண்டைபிடிக்க வேண்டும் போலிருந்தது மின்விளக்குக்கு.

அறையின் மூலையிலிருந்த கடவுள் படத்துக்கு முன்னால் குத்துவிளக்கு சுடர்விட்டுக் கொண்டிருந்தது மின்விளக்கின் பளிச்சென்ற ஒளி குத்துவிளக்கின் ஒளியை விழுங்கி விட்டது. தானே அறை முழுதும் தேவையான ஒளியைக் கொடுக்கும் போது குத்துவிளக்கு வீணாக எரிவதுபோல் எண்ணியது மின் விளக்கு.

கடவுளை வணங்கிவிட்டு மீண்டும் அவன் கட்டிலை நோக்கி வந்தபோது முதுகை நிமிர்த்துவது போல நிமிர்ந்து பின் வளைந்து எரிந்தது குத்துவிளக்கின் சுடர். 'சிறிய காற்றினாலேயே அணைந்துவிடும் உனக்கு இவ்வளவு திமிரா' என்று கேட்டது மின் விளக்கு.

மின் விளக்கில் பூச்சிகளும் ஈசல்களும் மொய்த்தன. திண்டுவாரற்றுக்கிடந்தது குத்துவிளக்கு. 'நான்தான் அறைமுழுவதும் ஒளி கொடுக்கிறேனே நீ ஏன் வீணாக எரிந்துகொண்டிருக்கிறாய்.' மீண்டும் மின்விளக்கு சீண்டிய போது குத்துவிளக்கினால் பொறுக்கமுடியவில்லை; 'கேவலமானவள் நீ. உன்னைச் சுற்றித்தான் எத்தனை பேர் சுகம் காண்கிறார்கள். என்னிடம் வந்தால் என் கற்புத்தீ பொசுக்கிவிடும்' என்றது.

மின்விளக்குக்கு ஆத்திரம் தாளவில்லை. உக்கிரமாக ஒளி வீசி எரிந்துகொண்டிருந்தது. 'என்ன இருந்தாலும் ஒளிச் சக்தியால் கூடியவள் நான்தான். உன்னைவிடப் பெரியவள்தான்' என்று இறுமாந்தது மின் விளக்கு. 'எவ்வளவு சக்தி படைத்திருந்தாலும் விபச்சாரி போல் ஒழுக்கம் கெட்ட நீ தாழ்ந்தவள்' என்று கூறியது குத்துவிளக்கு.

ஆணவத்தின் எல்லையில் அழிவு பிறப்பது போல் 'பக்' கென்று அணைந்தது மின் விளக்கு. இன்ப அணைப்புக்கு இருள் தேவைப்பட்டதால் அணைந்துவிட்டார்கள். குத்து விளக்கை அணைப்பதற்காக அவன் எழுந்தபோது அதுதானாகவே அணையட்டும்' என்று கூறித் தடுத்துவிட்டாள்.

தன் பலம் முழுவதையும் பிரயோகித்து இருளை விரட்ட முயன்று தோற்றுக்கொண்டிருந்தது குத்துவிளக்கு. அந்த மங்களமான வெளிச்சத்தில் அணைந்திருந்த மின்விளக்கு தலைகுனிந்து கொண்டிருப்பது தெரிந்தது. குத்துவிளக்கின் நல்ல மனதுக்கு அந்நிலையைப் பார்த்துத் தாங்கமுடி

(7-ம் பக்கம் பார்க்க)

## ஆவியுலகத் தொடர்பு—17

# காந்திஜி ஏன் எதிர்த்தார்?

**ஆவிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை காந்திஜி விரும்பவில்லை. அதனை கடுமையாகவும் எதிர்த்தார். ஆனால் பல வருடங்களின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத்தை மீடியமாகப் பாவித்து காந்திஜி கடிதம் எழுதியுள்ளார். ராஜனபாபுவின் காரியதரிசியாகவிருந்த திருமதி தர்பார் எழுதிய புத்தகத்தில் இத்தகவல் இருக்கிறது.**

இறந்தவர்களோடு பேசுவதையும், அப்படிப்பட்ட தொடர்புகளை விரும்புபவர்களையும் காந்திஜி பலமாகக் கண்டித்தார். ஏன் கண்டித்தார்? இதைப் பற்றி காந்தியடிகளே 12 9-1929 ஆம் திகதி 'யங் இந்தியா' [Young India] பத்திரிகையில் எழுதினார். அவை வருமாறு:-

இறந்தவர்களின் ஆவிகளிடமிருந்து உங்களுக்கு ஏதேனும் தகவல்கள் வருகின்றனவா? அல்லது இல்லையா? அவ்விதம் தகவல்கள் வருவது சாத்தியம் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? உண்டென்றால் அவற்றை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? இவ்விதமெல்லாம் கேள்விகள் கேட்டுப் பல அன்பர்கள் எனக்குக் கடிதங்கள் எழுதியுள்ளனர். கடைசியாக ஒருவர் பின்வருமாறு எழுதிக் கேட்டுள்ளார்.

'சென்ற இரண்டு வார காலத்தில் பம்பாயிலுள்ள இந்திய ஆவி உலகத்தொடர்பு சங்கத்தையும் அதன் வெளியீடுகளைப் பற்றியும் ஓரளவு அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. இந்தச்சங்கம் ஏராளமானவர்களின் மனதைக் கவர்ந்திருக்கிறதென்று அறிகிறேன். அதன் பலனாக அவர்களில் பலரும் தங்களுக்கு நெருங்கிய உறவினர்களின் ஆவிகளுடன் தொடர்புகொண்டனர். அதன் காரணமாகத் திருப்திகரமான பலன்களும் கிடைத்துள்ளன. புனாவிலுள்ள திலகர் டாங்கியில் சமீபத்தில் ஒரு சிறுவன் மூழ்கி இறந்துவிட்டான். அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் பையனின் ஆவியுடன் தொடர்புகொள்வதற்காக இந்தச் சங்கத்தின் உதவியை நாடினர். பையனின் ஆவி அவர்களுடன் தொடர்புகொண்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. அச்சங்கத்தின் நிர்வாகியான திரு. வி. டி. ரிஷி அவர்கள் சுபத்ரா அல்லது மரணத்தின் பின் வாழ்க்கை என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். தமது மனைவியின் ஆவியும் மற்றவர்களின் ஆவியும் தம்முடன் பேசிய பேச்சுக்களைப் பற்றிய விபரங்களை அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆவிகள் இப்பூமியில் உள்ள தங்களின் உறவினர்கள், நண்பர்களுடன் பேசுவதில் மிகுந்த ஆனந்தம் அடைகின்றன என்றும் அது ஆவிகளுக்கு ஒருவித ஆறுதலாக இருக்கின்றன என்றும் அவர் தமது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆவிகளுடன் பேசும் சாத்திரத்தைப் பரப்பித் தங்களுக்கு நன்மைசெய்து வருவதற்காக தமக்கு ஆவிகள் அடிக்கடி நன்றிசெலுத்துகின்றன என்றும் அவர் கூறுகிறார். விஞ்ஞான சாத்திரத்தின் இந்தப் பகுதியில் விஞ்ஞானிகள் அக்கறை காட்டவில்லை என்றும் மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை எப்படி உள்ளது என்பதை அறிந்துகொள்ள முயற்சிக்கவேண்டியது அவசியமென்றும் திரு. ரிஷி கருதுகிறார்.

இதுவரை நான் அச்சங்கத்துடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாமல் விலகியே இருந்துவந்திருக்கிறேன். இவ்விஷயத்தில் மேற்கண்டவற்றிற்கு விரோதமாக ஏதாவது திருப்திகரமான வாதங்கள் கூறி தங்களுடைய கருத்து என்ன என்பதை (நீங்கள் விரும்பினால் பகிரங்கமாக) அன்புடன் வெளியிட முடியாதா? அவ்விதம் செய்வது ஆவிகளுடன் தொடர்பு வைத்துள்ள பலருக்கும் இனிமேல் தொடர்புவைத்துக்கொள்ள விரும்பும் பலருக்கும் எனக்கும் கூட பலன்தரத்தக்கதாகஇருக்கும். ஆவிகளுடன்தொடர்புவைத்துக்கொள்வது விரும்பத்தக்கதல்ல என்றால் ஆவிகளிடமிருந்து ஸ்ரீரிஷிக்கு வந்துள்ள செய்திகளுக்கு என்ன காரணம் கூறமுடியும்?

### காந்திஜியின் பதில்

மேற்கண்ட கடித விஷயமாக எனது பதில் திட்டவட்டமாக இருக்கவேண்டும். மாண்டவர்களின் ஆவிகளிடம் இருந்து எனக்கு ஒரு காலத்திலும் செய்திகள் வந்ததில்லை. அத்தகைய செய்திகள் வருவதற்குச் சாத்தியம் உண்டு என்பதை நம்பாமல் இருப்பதற்கும் என்னிடம் சாட்சியம் எதுவுமில்லை. எனினும் அத்தகைய தொடர்புவைத்துக் கொள்வதையோ, வைத்துக் கொள்ள முயற்சிப்பதையோ நான் பலமாகக் கண்டிக்கின்றேன். அத்தகைய செய்தித் தொடர்புகள் சாத்தியமென்று வைத்துக்கொண்டாலும் கூட அவ்விதம் வைத்துக்கொள்வது ஆவிகளுக்கும்- நடுவிலுள்ள தூதர்களுக்கும் [மீடியங்களையே காந்தி இவ்விதம் குறிப்பிடுகிறார்] அபாயகரமானதேயாகும். அத்தகைய வழக்கம் உள்ளவர்களால் 'அழைக்கப்படும்' ஆவிகளுக்கு மீண்டும் பூமியில் பிணைப்பு ஏற்படும்படி செய்கிறது? இதற்கு மாறாக அது 'மீண்டும் பூமியிலுள்ள பந்தங்களிலிருந்து விடுபட்டு உயர்நிலை அடைவதாக இருக்கவேண்டும். ஆவிக்கு உடலில்லை என்பதற்காக அது அதிகத் தூய்மையுள்ளதாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பூமியில் இருந்தபோது அதனிடம் என்ன குற்றங்குறைகள் உண்டோ அவையெல்லாம் ஆவி உலகத்திலும் அதனிடம் இருக்கின்றன. எனவே அதனால் கொடுக்கப்படும் தகவலோ அல்லது ஆலோசனையோ உண்மையாகவோ அல்லது சிறந்ததாகவோ இருக்கும் என்பதற்கில்லை. பூமியில் உள்ளவர்களிடம் ஆவி தொடர்புகொள்ள விரும்புகிறது என்பது மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய விஷயம் அல்ல. அதற்கு மாறாக அத்தகைய சட்டவிரோதமான பற்றுதல்களில் இருந்து ஆவி தடுக்கப்படவேண்டும்.

ஆவிக்குத் தீமை ஏற்படுகிறது என்பது அவ்வளவோடு இருக்கட்டும்.-நடுவில் உள்ளோர்க்கு ஏற்படும் தீமைகள் பற்றி இப்போது கவனிப்போம். ஆவிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதாக எண்ணும் யாவரும் சித்தசுவாதீனமற்றவர்களாகவும் மூளைக்கோளாறு உள்ளவர்களாயும் எவ்வித உருவான வேலையும் செய்வதற்குத் தகுதியற்றவர்களாயும் இருக்கிறார்கள் என்பது நான் நிச்சயமாகத் தெரிந்து கொண்ட விஷயமாகும். என் நண்பர்களில் எவரும் அத்தகைய தொடர்பு வைத்துக் கொண்டு எவ்விதத்திலும் பலன் அடைந்ததாக எனக்குத் தெரியவில்லை.'

என்று காந்தியடிகள் மேற் சொன்ன யங் இந்தியா(Young India) பத்திரிகையில் எழுதியுள்ளார். இத்தொடர்பை விரும்பாததற்குக் காந்திஜி கூறும் காரணங்கள் அவரது சொத்தக் கருத்துக்களே! ஆனால் உண்மையில் பலர்

**வி. ரவிச்சந்திரன்**

ஆவியுலகத்தொடர்பினால் பலனடைந்திருக்கிறார்கள். ஆவிகளின் ஆலோசனையின் பேரில் எவ்வளவோ நல்ல காரியங்கள் நடந்துள்ளன. ஆவியுலகத் தொடர்பினை இன்று உலகில் பல விஞ்ஞானிகள் ஆராய்கிறார்கள். அப்படி ஆராயும் போது அவர்களே நல்ல மீடியமாக மாறி பல ஆவிகளுடன் தொடர்புகொள்கிறார்கள். காந்திஜி சொல்வது போல அவர்களை சித்தசுவாதீனம் அவற்றவர்களாயும், மூளைக் கோளாறு உள்ளவர்களாயும் எவ்வித உருவான வேலையும் செய்வதற்குத் தகுதியற்றவர்களாயும் ஏற்றுக்கொள்ள முடியுமா?

### சிவயோகி கூறியது

பூமியில் ஐம்பது வருடகாலம் கோவணாண்டியாக வாழ்ந்து மறைந்த ஒரு சிவயோகி எங்களிடம் தொடர்பு கொண்டபோது பின்வருமாறு சொன்னார்.

"எனக்குப் பதின்மூன்று வயதில் சிவனுடைய தரிசனம் கிடைத்தது. அப்போது முதல் ஐம்பது வருடகாலம் நான் அவரை அன்புடன் தியானித்து வந்தேன். எனக்கு 63 வயதில் சிவன் நேரில் காட்சியளித்து என்னை சிவலோகம் அழைத்துச்சென்றார். அங்கு அவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது என்னை ஆவி உலகம் போகச் சொன்னார். நான் அவருடனே இருக்கவேண்டுமென்று மன்றாடினேன். அதற்கு அவர் 'நீ பூவுலகில் எம்பக்தனாக இருந்தது உண்மைதான். ஆனால் உன் பக்தியினால் மக்களுக்கு எவ்வித பலனும் உண்டாகவில்லையே! எனவே நீ ஆவியுலகில் சில காலம் கழித்துவிட்டு எம்மை வந்து அடைவாய்' என்று கூறி என்னை ஆவி உலகம் அனுப்பிவிட்டார். பூவுலகில் இருந்தபோது மக்களுக்குச் செய்யாத உதவியை நான் இப்போது உங்கள் மூலம் செய்து மேல் நிலையை அடைய விரும்புகிறேன் என்றார். [அப்படியே எங்கள் மூலம் இன்றும் பல காரியங்களை நிகழ்த்துகிறார்.] இதிலிருந்து பூமியில் உள்ளவர்களோடு தொடர்புகொள்வது ஆவிகளின் முன்னேற்றத்தை பாதிப்பது இல்லை என்பதை உணரலாம்.

### ராஜன்பாபுவின் கடிதம்

காந்திஜி ஆவிகளுடன் பேசுவதை விரும்பவில்லை. ஆனால் அவருடைய நண்பரும், அரசியல் சீடர்களுள் ஒருவரும் இந்தியாவின் முதல் ஜனாதிபதியுமான பாபு ராஜேந்திர பிரசாத்துக்கு இவ்விஷயத்தில் அசைக்க முடியாத நம்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## கவிஞர் கந்தவனத்தின் கவின்மிகு கவிதைகள்—3

# தமிழ் எங்கள் உயிருக்கு மேல்!

**இரசிகமணி கனக செந்திநாதன்**

எந்த விஷயமும் மனித சக்தியாலும் அதற்கு மேற்பட்ட தெய்வ சக்தியாலும் நடைபெறுகின்றதென்பது நமது முன்னோர் கொள்கை. எங்கள் மொழியைத் தெய்வத் தமிழ் மொழி என்று சொல்லுவதும் கடவுளர்களைத் தமிழின் சுவை என வர்ணிப்பதும் புலவர்கள் மரபாகிவிட்டது. ஆதிசிவன் பெற்ற தமிழ் என்றே பாரதியார் கூறினர்; முருகப்பெருமான். அருணகிரிக்கும் தமிழை உபதேசித்தார் என்று கூறுவதும் மரபு. எனவே எங்கள் மொழிக்கு நேர்ந்த இடர் தீரக் கவிஞர் தமிழ் தந்த முருகனையே வேண்டி நிற்பதில் நியாயம் இருக்கிறது. அவர் நல்லூர்க்கந்தன் மீது பாடிய நாற்பது பாடல்களுள் 'வேண்டும் பத்து' என்ற பகுதியில் தமிழைக் காக்கவேண்டும் என்று முருகனிடம் வேண்டுகின்றார். பாடல்கள் தமிழின் பழமையையும் அழகையும் சுவையையும் அப்படியே காட்டுகின்றன. உதாரணத்துக்கொரு பாடல்:

மொழியினிலே யரியதமிழ்
மொழியைப் போன்றோர்
மொழியவே றொன்
றில்லையென மொழிந்தார்
சான்றோர்
விழியினிலே பெருமூச்சில்
விழும் நீரோடு
வீரமொழி தீரமொழி
வீழ்ந்தாள் தாழ்ந்தாள்
வழியெதுவு மில்லாத
வறியோர் போல
வந்தகுறை யெச்சமதில்
வாழும் ஈனப்
பழியழிய நல்லூரில்
படைவேற் கந்தா
பார்த்தருளவேண்டுமவள்
பார்மே லோங்க.

இறைவனை வழிபடுவது. முத்தியின்பம் பெறும்பொருட்டேயாயினும் ஒவ்வொருவரும் தத்தம் தளத்தில் நின்று தத்தமக்கு வேண்டியவைதயே இறைவனிடம் கேட்கின்றனர். வறியவன் பொருளுக்காக வேண்டுகின்றான். மலடி பிள்ளைப் பேற்றுக்காகவேண்டுகின்றாள். முற்றுந்துறந்தவர்களாலேதான் மோட்ச சாம்ராஜ்யத்தைக் கேட்கமுடியும். எங்கள் கவிஞர் பொன்னைப் பொருளைக் கேளாமற் போக வாழ்க்கையைக் கேளாமல். தமிழைக் காக்கும்படி கேட்கின்றார். சிலருக்கு இது நகைப்பைக் கொடுக்கலாம், ஆனால் ஈழத்துப் புலவர் மரபு வழி இதுவேதான்:-

"இருந்தமிழே உன்னால்
இருந்தேன்-இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும்
வேண்டேன்,

என்றார் தமிழ்விடு தூது பாடியவர்.

'சாவில் தமிழ் படித்துச்
சாகவேண்டும்-எந்தன்
சாம்பல் தமிழ் மணக்க
வேகவேண்டும்'

என்றார் கவிஞர் சச்சிதானந்தன்:

'தெள்ளற்ற தமிழமுதின்
சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்
கண்டார்'

என்றார் பாரதியார்.

'அமிழ்தம் அவனது மொழியாகும். அன்பே அவனது வழியாகும்' என்றார் நாமக்கல் கவிஞர். எல்லோரிலும் பார்க்க தமிழ் உணர்ச்சி மிகத் 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாடினார் பாரதிதாசன். மேடைகளில் எல்லாம் இத்தொடர் முழங்குகின்றது. கவிஞர் கந்தவனம் இதற்குமேலே தமிழை உயர்த்தவேண்டும் என்ற எண்ணத்துடன் 'தமிழ் உயிருக்கு மேல்' என்று பாடியுள்ளார். மாவிட்டபுரத்தில் நடந்த தமிழரசுக் கட்சியின் இலக்கிய மகாநாட்டில் 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற தலைப்பிலே ஒரு கவியரங்கம் நடந்தது. அதில் கவிஞர் கந்தவனமும் பங்குபற்றினார். 'இதுவும் ஒரு தலைப்பா?' என்று தலைப்பைப் பகடிபண்ணினார் கவிஞர். சபையில் இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். வீரத்தமிழர் உயிரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அப்படி மதிப்பில்லாத உயிருக்குத் தமிழ் நேர் என்று பாடலாமா என்று கேட்டார் ஒரு கேள்வி. கரகோஷம் வானைப் பிளந்தது. தொடர்ந்து அற்ப உயிரிலும் பார்க்க தமிழ் மேலானது என்றுமுழங்கினின்றார் கவிஞர். அந்த நல்ல பாடல்களில் ஒன்று இது:

தமிழ் எங்கள் உயிருக்கும்
மேல்மேல்-அன்புத்
தமிழ் எம்மை உருவாக்கி
உய்விக்கும் வேல்வேல்
தமிழ் தன்னிற் பற்றென்று
சொன்னால் - இன்பத்
தமிழ்ப் பண்ணைப்
பின்பற்றிக் காட்டுங்கள்
முன்னால்
தமிழிற் பற்றில்லாத பேரின்
-உயிர்க்குத்
தமிழன்னை நேரென்று
கவிஞர் சொல் வாரோ
தமிழ் எங்கள் கண்கண்ட
தெய்வம்-நாளும்
தமிழ்த்தாயை மனம்வைத்து
வணங்கினால் உய்வோம்.

முதலாவது கட்டுரையில் கவிஞர் அவர்களது கற்பனை வளத்தையும், இரண்டாவது கட்டுரையில் அவரது சமூகப் பார்வையையும், இந்தக் கட்டுரையில் அவரது தாய்மொழிப் பற்றையும் எடுத்துக்காட்டினேன். அடுத்த கட்டுரையில் அவர் பாடிய குழந்தைப் பாடல்கள் பற்றிப் பார்ப்போம்.

## கடலைப் பருப்புப் பண்டங்கள்




"சீதா...... இன்று எனது வீட்டில் டியன் லட்டு" என்று கூறும் போதே நெய்யின் வாசமும், லட்டின் சுவையும் எம்மையறியாமல் வாயில் நீர் ஊறுகிறது. கீதாவின் பேச்சிலே குதூகலம். ஆனல் எப்படியப்பா லட்டு செய்வதென்று திருப்பி சீதா கீதாவைக்கேட்க முடியுமா? ஒவ்வொருவரும் கடலைப்பருப்பைக்கொண்டு நல்ல பண்டங்களை செய்வது என்பதை நன்கு அறிந்திருப்பது நல்லதல்லவா.

### லட்டு

தேவையான பொருள்கள்

2 ரு கடலைப் பருப்பை மாவாக்கிகொள்ளவும்
2 ரு சீனியையும் மாவாக்கவும்
5 தேக்கரண்டி நெய்
1 தேக்கரண்டி ஏலக்காய் தூள்
சிறிதளவு வனிலா, பிளம்ஸ் சேர்க்கவும்;

செய்முறை:

சீனியையும் கடலைமாவையும் உரலில் போட்டு நன்ருக இடிக்கவும். பின் ஏலக்காய் தூள், வனிலா, கொதித்த நெய் ஆகியவற்றையும் சேர்த்து இடிக்கவும் உதிராத பருவத்தையடையாவிடின் சிறிதளவு கொதிக்கும் நீரைவிட்டு இடிக்கவும். பின்னர் பிளம்சை சேர்த்து உருண்டைகளாக பிடித்து பரிமாறலாம்;

### போளி

தேவையான பொருள்கள்

1 ரு கடலைப் பருப்பு
1 தேங்காய் துருவல்
ஒன்றரை ருத்தல் சீனி
ஒன்றரை ருத்தல் கோதுமை மா
சிறிதளவு நெய், உப்பு, அப்பச்சோடா

செய்கை முறை:

முதலில் கோதுமைமாவை உப்பு, நெய், அப்பச் சோடா விட்டு இறுக்கமாக பிசைந்து வைக்கவும். கடலைப் பருப்பை நன்ருக அவித்து தேங்காய் துருவல், சீனி, ஏலக்காய் போட்டு கிளறவும். பின்னர் அம்மியில் வைத்து அரைத்து சிறு உருண்டைகளாக பிடிக்கவும்.

பின்னர் பிசைந்தமாவை பிடித்த உருண்டைகளை மூடி, தட்டில் வைத்து உருளையால் அரைத்து தோசைக் கல்லில் பொன் நிறமாக வாட்டி எடுத்து பரிமாறவும்.

### கடலைப்பருப்பு வடை

தேவையான பொருள்கள்

ஒன்றரை ருத்தல் கடலைப் பருப்பு
பச்சை மிளகாய். வெங்காயம்
சிறிதளவு செத்தல் மிளகாய்பொடி
கறிவேப் பிலை. உப்பு, பொரிப்பதற்கு எண்ணெய்

செய்முறை:

கடலைப்பருப்பை மூன்று மணித்திலாலங்கள் ஊற வைத்து உரலில் இட்டு உதிராது வரும் பருவம்வரை துவைக்கவும். பின்னர் பச்சை மிளகாய். வெங்காயம் கருவேப்பமிலை மிளகாய் பொடி. உப்பு முதலியவற்றைச் சேர்த்து உருண்டைகளாக பிடித்து எண்ணெயில் போட்டு பொன் நிறமாக வந்ததும் எடுத்துப் பரிமாறலாம்.

### பகோடா

தேவையான பொருள்கள்:

2 ரு. கடலைப் பருப்பு.
1 சுண்டு அரிசி.
½ ரு. தோல் நீக்கிய கடலைப்பருப்பு.
பச்சை மிளகாய், வெங்காயம், மிளகாய் பொடி, உப்பு, நெய், அப்பச்சோடா, கறிவேப்பிலைசிறிதளவு.

செய்கை முறை:

கடலைப்பரும்பையும், அரிசியையும் வெவ்வேருக ஊறவிட்டு, கடலைப்பருப்பை சற்று கரகரப்பாகவும், அரிசியை நன்ருகவும் அரைத்துக் கலக்கவும். பின்னர் நெய், அளவான உப்பு, நறுக்கிய வெங்காயம், மிளகாய், கறிவேப்பிலை, அப்பச் சோடா, மிளகாய்பொடி ஆகியவற்றைக் கலக்கவும். பின்னர் மூன்று விரல்களாலும் தட்டையாக்கி சிறு, சிறு துண்டங்களாக எண்ணெயில் போட்டு பொன்நிறத்தில் பொரித்து எடுக்கலாம்.

### ஓமப்பொடி

தேவையான பொருள்கள்:

2 ரு. கடலை மாவு.
1 ரு. அரிசி மாவு.
2 தேக்கரண்டி ஓமத்தூள்.
மிளகாய் பொடி
சிறிதளவு உப்பு, நெய், அப்பச்சோடா, பொரிப்பதற்கு எண்ணெய்.

செய்கை முறை:

மேற்சொல்லிய பொருள்களையெல்லாம் ஒன்ருக விட்டுப் பிசைந்து, முறுக்குரலில் ஓமப்பொடி சில்லைப் போட்டு எண்ணெயில் வட்டமாக பிளியவும். செந்நிறமாக வந்தவுடன் எடுக்கவும்.

### காராப்பூந்தி

தேவையான பொருள்கள்:

1 ரு. கடலைமாவு.
½ ரு அரிசி மாவு
மிளகாய் பொடி, அப்பச்சோடா, உப்பு, சிறிதளவு பொரிப்பதற்கு எண்ணெய்.

செய்கை முறை:

மேற்கூறிய பொருட்களை ஒன்ருக போட்டு தண்ணிர் விட்டு சற்றுத் தடிப்பாக கரைத்துக் கொள்ளவும். தாச்சியில் எண்ணெய்க்கு மேலாக ஓட்டையிட்ட கரண்டியைப் பிடித்துக்கொண்டு வலதுகையினுல் கரண்டியில் மாவை எடுத்து சீக்கிரத்தில் தேய்த்துவிடவும். காராப்பூந்தி சிவந்ததும் எடுக்கவும்.

—அண்ணி

# நேர்முகப்பரீட்சைகளில் திறமைக்கு முதலிடம் கிடைக்கிறதா?

பல நேர்முகப்பரீட்சைகளுக்குச் சென்று அனுபவப்பட்டவன் என்ற முறையிலும் இளையசமுதாயத்தின் இதயத் துடிப்பை நன்குணர்ந்தவன் என்ற முறையிலும் இன்று நேர்முகப்பரீட்சைகள், சமுதாயத்திடையே ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பற்றி இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

### எது திறமை?

திறமை ஒன்றுக்கே முதலிடமளிக்கப்படுமென்பது அரசின் வாக்குறுதி ஆனல் மதலாச்சியில் 270 புள்ளியுள்ளவனுக்கும் மன்னுரில் 290 புள்ளியுள்ளவனுக்கும் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு அனுப்பப்படும் அதேவேளையில் யாழ்ப்பாணத்தில் 375 புள்ளி உள்ளவனுக்கே நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது இது ஆசிரியநியமன விஷயத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாருயின் மதவாச்சிக்கு ஒரு நீதி, யாழ்ப்பாணத்துக்கு ஒரு நீதியா? புத்தளத்துக்கு ஒருநீதி, கொழும்பு, கண்டிக்கு ஒரு நீதியா? இதுவா திறமைக்கு முதலிடம் கொடுப்பதன் இலட்சணம்? என்றுகேட்கிருர்கள் இளைஞர்கள்.

காவிடினும் வேலைகளிலாவது முன்னுரிமை வழங்கப்படக் கூடாதா?

### விஞ்ஞான மாணவர் புறக்கணிப்பு

விஞ்ஞானப்பாடமொன்றில் அதிவிசேட சித்தி பெறுவதென்ருல் அது மிக அபூர்வமானதும் கடினமானது

**பற்றிமகரன்**

மான ஒன்று. அதேவேளைகலைப் பாடங்களில் அதிவிசேடசித்தி பெறுவது இலகு என்பதே பொதுவான அபிப்பிராயம். நிலைமை இப்படியிருக்க விஞ்ஞானத்துறையையும் கலைத்துறையையும் ஒன்ருகக்கருதி விசேட சித்திகளுக்கு புள்ளி வழங்கி நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு அனுப்பப்படுகையில் விஞ்ஞான மாணவனின் திறமை மறைக்கப்படுகிறது ; மறுக்கப்படுகிறது.

பரீட்சைப் பேறுகளை திறமைச் சித்திகளாக மட்டுமே பெற்ற திறமையுள்ள இவ் வயதுக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டு அரசசேவையில் சேரும் சந்தர்ப்பத்தையே இழக்கின்றனர். எனவே இவ் வயதெல்லையில் உள்ளவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப் புள்ளிகள் வழங்கப்படவேண்டுமென்று வற்புறுத்துவது நியாயமல்லவா!

### அரசுக்கு சில யோசனைகள்

சுமார் ஏழு வருடகாலமாக அரசியல் பழிவாங்கல்களுக்கும் கழுத்தறுப்புகளுக்கும் ஆளாகி வேலையின்றித் தவிக்கும் பல லட்சம் இளைஞர்கள் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற வேலை இவ்வரசில் கிடைக்குமென நம்புகின்றனர். இச்சமயத்தில் சரியான முறையில் சிந்தித்து அரசு செயற்படத் தவறுமாஞல் இளைய சமுதாயத்தின் வெறுப்புக்கு தன்னை ஆளாக்கிப் பின்னர் பல தீய விளைவுகளை எதிர்நோக்கும் துர்ப்பாக்கிய நிலையையும் அடையலாம். எனவே இதனைத் தவிர்க்கும் வகையில் பின்வரும் யோசனைகளை அரசு கவனத்தில் எடுப்பது நன்ருய் இருக்கும்.

# குளறுபடிகளும், முறைகேடுகளும் ஒழியும் நாள் எந்நாளோ!

### ஏமாற்று வித்தை

உண்மையில் வடக்கைப் பொறுத்தவரை 3விசேடசித்தி (Distinction), 3திறமைச்சித்தி (Credits) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் உள்ளவர்களுக்கே ஆசிரியர் நியமன நேர்முகப்பரீட்சை அழைப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாருயின் இந்நியமனங்களுக்குவிண்ணப்பங்களைக் கோரும்போது இதேஅடிப்படையில் விண்ணப்பிக்கும்படி விளம்பரப்படுத்தியிருக்கவேண்டும் மாருக க. பொ. த வில் 3திறமைச் சித்தி (Credits) உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாமென விளம்பரப்படுத்தியதன் மூலம் பல இல்ட்சம் இளம் மனதுகளில் தங்களுக்கும் வேலைகிடைக்கலாமென்னும் நப்பாசையை வளர்த்து அதன் மூலம் தபால்இலாகாவுக்கு பலஇலட்சம்ருபா வருமானத்தையும் பெற்றுக்கொடுத்தபின் இவ்வாறு உயர்வான பரீட்சைப்பேறுகளுக்கு மட்டும் நேர்முகப் பரீட்சை வைக்கும் ஏமாற்று வித்தையை செய்து அரசு வேலையில்லாது தவிக்கும் உள்ளங்களுக்கு மனஉளைச்சலையும் பணவிரயத்தையும் பரிசாக வழங்குகிறது.

### உயர்தரப் பரீட்சைக்கு மதிப்பில்லை

க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சை பேறுகளுக்கு அதிக புள்ளிகளை வழங்குவதன் மூலம் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் தரம் குறைக்கப்படுகிறது. க. பொ. த. (சாதாரண) தரத்தில் ஒரு விசேடசித்தியை (Distinction) எடுப்பது இலகு. ஆனல் அதே வேளை அதே பாடத்தில் உயர் தரப் பரீட்சையில் சாதாரண சித்தியடைவது என்பது மிகவும் கடினமான ஒன்று. இவ்வாருக கஷ்டப்பட்டுச் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு பல்கலைக்கழகத்திற்குத் தான் செல்வதற்கு வசதிகள் கிடைக்

### எவ்வகையைச் சார்ந்தவர்கள்?

இவ்வாருக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் விஞ்ஞான ஆசிரியர்களா அல்லது கணித ஆசிரியர்களா அல்லது ஆங்கில ஆசிரியர்களா அல்லது கலை ஆசிரியர்களா? எவ்வகையை இவர்கள் சார்வார்கள்? எந்த எந்தப்பாடங்களை இவர்கள் படிப்பிப்பார்கள்?

இவை ஒருபுறமிருக்க 1970ம் ஆண்டுக்குப் பின் வழங்கப்பட்ட பரீட்சைப் பேறுகளில் ஆள்மாருட்டம் பெருமளவில் நடந்து இதனுல் இப்பேறுகளையே நம்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. வழங்கப்படும் நியமனங்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

### எழுத்துப்பரீட்சை வேண்டும்

1970க்கு பின் பல ஊழல்கள் பரீட்சை பேறுகளில் நிகழ்ந்துள்ளமை நிருபிக்கப்பட்டும்-நிரூபிக்கப்படாமலும்உள்ளன. எனவே நியமனங்கள் வழங்கப்படுமுன் அவர்களுடைய ஆற்றலை பரிசோதிக்க எழுத்துப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட வேண்டும். இல்லையேல் இதன் விளைவை இலங்கை பல ஆண்டுகளுக்கு அனுபவிக்கவேண்டிவரும்.

### வயதுப் பிரச்னை

வேலைகளுக்கு விளம்பரப்படுத்தும்போது மேல்வயதெல்லையாக 35 ஐ அல்லது 28ஐ போடுகிருர்கள். எனவே இவ் வயதெல்லையில் இருப்பவர்களும் தங்களுக்கும் வேலை கிடைக்கக்கூடுமென்ற நம்பிக்கையுடன் விண்ணப்பிக்கின்றனர். ஆனல்நேர்முகப்பரீட்சை வேளையில் வயது எல்லையில் இருப்பவர்கள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை. க. பொ. த. சித்தியடைந்த இன்றைய இளைஞர்கள் வேலை பெற்றுக்கொண்டு செல்ல அதேவேளை அன்று விசேட சித்திகள் மிக அருமையாக வழங்கப்பட்ட வேளையில்

1. நியமனங்கள் வழங்கப்படுமுன் அடிப்படைத் தகைமையுள்ள அனைவருக்கும் பொதுப் போட்டிப் பரீட்சை வைத்து அதன் அடிப்படையில் நியமனங்களை வழங்க வேண்டும்.

2. விஞ்ஞான மாணவர்களைத் தனிப்பட்ட முறையிலும், கலை மாணவர்களைத் தனிப்பட்ட முறையிலும் பிரித்து அவரவர் ஆற்றலைப் பயன்படுத்தக்கூடிய முறையில் நியமன விண்ணப்பங்களைக் கோரவேண்டும்.

3. எந்த குறைந்த தராதரத்துடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு அனுப்பப்படவுள்ளதோ அந்தத் தராதரத்தையே விண்ணப்பத் தகை

[7ம் பக்கம் பார்க்க]

ரீப்போல்
இப்பொழுது
கைக்கடக்கமாய் உள்ளது
உபயோகத்திற்கு - இலேசாக அழுத்தி எடுக்கக்கூடிய ஒரு புதிய பக்கெட்டில் கிடைக்கிறது




மற்றெரு தரமான
லங்கெம் தயாரிப்பு

# வித்துவான் — ந. சுப்பையாபிள்ளையின் — வருகை

வித்துவான் அவர்களின் வாசஸ்தலம் சிதம்பரம். அங்கே நாவலர் வித்தியாசாலையில் உபகார வேதனம் பெற்று உயர் வகுப்பிற் தமிழ், சமஸ்கிருதம் படித்தவர்கள். சமஸ்கிருதம் படிப்பித்த சாஸ்திரிகள் வியாபகரணத்தில் மிகவல்லவர். சென்னை சர்வகலாசாலை நடத்திய வித்துவ பரீட்சைகளில் சரிபாதி தமிழும், சரிபாதி சம்ஸ்கிருதமும் உள்ள வித்துவான் பரீக்ஷை கடினமானது. அப்பரீக்ஷையில் முதன்மையாகச் சித்திபெய்தியவர்கள் வித்துவான் அவர்கள். அப்பரீக்ஷைக்கும் தனித் தமிழ் வித்துவான் பரீக்ஷைக்கும் தூரம் வெகுதூரம். இக்கினமாக, யாழ். நாவலர் வித்தியாசாலையில் உயர் வகுப்பை இருபது வருடகாலமாக நடத்திவந்தவர்களான சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் அவர்கள் 1922 ஆம் ஆண்டு மாசியில் மறைந்தார்கள். அவர்களிடம் படித்து வந்த நான் கலங்கவிழ்ந்த வணிகன் ஆயினேன்; ஏங்கினேன். 'இனி ஏதும் பரீக்ஷைக்குப் படிப்போம்' என்ற எண்ணம் உண்டானது.

இங்கே புலவர் அவர்களைப் போல, அங்கே சிதம்பரத்தில் தலைமையாசிரியராய் இருந்தவர்கள் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள். அவர்கள் எனக்குப் பாட்டன் முறையானவர்கள். அவர்கள் அப்போது ஏதோ சுபகருமத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வந்து நாவலர் வித்தியாசாலையில் தங்கினார்கள். அவர்கள் என்னிலையை உணர்ந்து, 'தக்காரொருவரை அனுப்பி வைப்பேன்' என்று ஆறுதல் கூறிச் சென்றார்கள்.

சென்றதும் வித்துவான் அவர்களை அனுப்பிவைத்தார்கள். வித்துவான் அவர்களுக்கு விவாகமும் கைகூடியது. நாவலர் வித்தியாசாலை, வித்துவான் அவர்களை வரவேற்றது.

வித்துவான் அவர்கள் எனக்குப் பாடஞ் சொல்லத் தொடங்கினார்கள். முதலில் சேனாவரையம், பாடம் நடந்தது. அது அவர்களுக்கு ஒரு மீட்டற் பாடமாயிருந்தது. விஸ்தாரமாகப் படிப்பிக்கத்தொடங்கினார்கள். அவர்களின் பேராற்றலைக் கண்ணுற்ற நான் பரீக்ஷைப்பாடம் படிக்கிறதை நிறுத்தி, சம்ஸ்கிருதத்தோடு சம்பந்தப்பட்ட இலக்கணங்களை அவர்களிடம் படித்தேன். தர்க்க சங்கிரகம் அன்னம் பட்டீயமும் படிக்கக் கூடியதாயிருந்தது. மேலும் அவர்களைப் பயன்படுத்த விரும்பி, இந்துக் கல்லூரி மேல் வகுப்பு மாணவர்களை பால பண்டித பரீக்ஷைக்கு வித்துவான் அவர்களிடம் படிக்கத் தூண்டினேன். பின்னேரத்தில் நாவலர் வித்தியாசாலைக் கிழக்கு விறாந்தையில் வகுப்பொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

சொல், எழுத்ததிகாரம், நன்னூல் விருத்தி முதலியன கற்பிக்கப்பட்டன. அவ் வகுப்புகளிலும் நான் கலந்து கொண்டேன். அவர்கள் நடத்தும் இலக்கிய பாடமும் இலக்கண பாடமாயிருந்தது.

அவர்களைப்போல அநாயசமாக இலக்கண பாடம் நடத்த வல்லவர்களை நான் கண்டதில்லை.

50 வருடத்துக்குமேல் வித்துவான் அவர்களின் ஆழ்ந்த படிப்பு யாழ்ப்பாணத்துக்குப் பெரும் பயன் செய்திருக்கின்றது.

இப்போழுதைய நவீனதமிழ் உலகம், வித்துவான் அவர்கள் அறியாதது. இனி அவர்களுக்கு இங்கேஇடமில்லை என்று எண்ணிப் போலும் தில்லைக் கூத்தப்பிரானார் அவர்களை அழைத்துவிட்டார்.

யாழ்ப்பாணத்தவர்கள் தம் நன்றிக் கடனைப் பிரார்த்தனை மூலம் வெளிப்படுத்தி ஆத்ம சாந்தி செய்வார்களாக.

"'வித்துவான் போல்வார் மிக
அரியர் விண்ணகத்தும்
இத்தரையில் யாரே
இவரொப்பார் – ஒத்த
தமிழ்★சங் கதஅறிவில்
தாமே தமக்கு
நிகராவார் மேலென் நினைவு.

★ சங்கதம் - சம்ஸ்கிருதம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

# இறைவனின் புனித நிலையை அளக்க முடியுமா?

எல்லாவற்றிக்கும் அடிப்படை ஒன்றுதான். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் உண்மை உருவான இறைவன்! எல்லோருக்கும் அருள் புரிந்து சமநிலையிலிருந்து எல்லோரையும் பாதுகாக்கின்றான். மனிதன் தன்னால்தான் கெட்டுச் சீரழிகின்றானே ஒழிய இறைவன் மனிதனைக் கெடுக்கவில்லை.

உயிர் என்றால் என்ன என்று கூட மனிதனால் கண்டுபிடிக்க முடியாத நிலையில் வாழும் நாம் இறைவனின் தன்மையை எந்தத் தத்துவ அடிப்படையில் அளந்து அறிய முடியும்? மனிதனின் உடல் இயக்கத்தையும் அதன் தன்மைகளையும் உடல் இயக்கத்தில் செயலாற்றும் உயிரணுக்களின் இயக்க அசைவுகளையும் அறிந்தானேயொழிய உயிரின் தன்மையை அறிய முடியவில்லை. ஆகையால் எமது மூளைப்பலம் இறைவனின் பரம இரகசியத்தை எவ்வாறு அளவைக்காரணியாகஅளக்க முடியும்?

இறைவனின் புனிதத்தன்மையை நாம் அளக்கமுயல்வது எவ்வாறு நிகழுமெனில் கடல் நீரைச் சிறிய பாத்திரத்தில் உள்ளடக்குவது போன்ற தத்துவ அடிப்படையைப் போன்றதாகும். இறைவன் வியத்தகு அற்புதக் கலைஞன். எல்லாவற்றினையும் கடந்து நிற்கும் பேரொளி. எல்லாவற்றிற்கும் புத்துயிர் அளிக்கும் புதுமைப் பித்தன். இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனை வலியுறுத்துவதற்கும் மனிதனைப் புனிதனாக வாழ்வதற்கும் உடல் சுகத்தோடும், உளச் சுகத்தோடும் மனிதனை வாழப்பண்ணுவதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்கு விதிதான் இந்து சமய தத்துவமும் இந்து சமயச் சடங்கு முறைகளும்.

உலகிலுள்ள பேரறிஞர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கூடினாலும் இறைவனுக்கு அப்பேரறிஞர்கள் ஓர் உருவம் அமைத்து இறைவனை உருவகப் படுத்த முடியாது. இறைஎன்பது பேரறிஞர்கள் எல்லாவற்றினையும் கடந்து நிற்கும் மாபெரும் சக்தி வாய்ந்த பேரொளி. ஆகையினால் பேரறிஞர்களினதும், கலையிலாளர்களினதும் படைப்பு நிலைக்கு அப்பாற்பட்டுக் கடந்து நிற்கும் கடவுளுக்கு ஓர் உருவம் அமைத்து இதுதான் கடவுளெனக் கூறினால் அப்பேரறிஞர்களினதும் கலையியலாளர்களினதும் கனவுலகக் கதையே ஒளிய கடவுளாக ஒரு போதும் இருக்கமுடியாதெனக் கடவுள் நம்பிக்கை உடைய ஒருவனே கூறிவிட முடியும்.

உள்ளத்தில் தூய்மையற்ற அறமற்ற தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலைஞன் தனது கற்பனையில் எழுந்த ஓர் அழகான சிலையைச் செதுக்கமுடியும். அப்படைப்புக் கடவுளானால் அச்சிலைதான் இறைவனெனக் கூறினால் இறைவனையே நாம் பரிகாசம் செய்தவர்களாகக் கருதப்படுவோம்.

விக்கிரக ஆராதனை இரண்டு மகத்துவமான காரணிகளை ஏற்படுத்த வல்லது ஒன்று. தெய்வ நம்பிக்கைக்கும் மன ஒருமைப்பாட்டிற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒன்றுதான் விக்கிரா ஆராதனை. இறை நம்பிக்கை ஏற்பட்டதற்கு இரண்டு அடிப்படைக் காரணிகள் உண்டு. முதலாவது பயத்தின் அடிப்படை. இரண்டாவது மெய்யுணர்வின் கூர்ப்பு நிலை. பயத்தினாலும் கடவுள் நம்பிக்கை ஏற்படலாம். மெய்யுணர்வின் கூர்ப்புநிலையிலும் கடவுள் நம்பிக்கை ஏற்படலாம். ஆகையால் இரண்டிற்கும் ஒன்றே அடிப்படை.

சி. அமிர்தநாதன்




## திருமுறைச் செல்வம்

ஆசிரியர்: திரு நா. முத்தையா
வெளியீடு: ஆத்மஜோதி,
நாவலப்பிட்டி, இலங்கை
விலை: 7 ரூபா 50 சதம்.

உலகத்திலே பலவித செல்வங்கள் உண்டு. அவற்றுள் பலவற்றைத் தேடிக்கொள்வதற்கு ஓர் ஒழுக்கமுறை உண்டு. பொருட்செல்வத்தை எப்படியும் தேடிக்கொள்ளலாம். ஆதனாற்போலும் 'பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள' என வள்ளுவர் கூறிப்போந்தார்.

'செல்வன் கழலேத்தும் செல்வம்செல்வமே' என ஒரு சிறந்த செல்வத்தை ஞானசம்பந்தர் எமக்கு எடுத்துக்காட்டிச் சென்றுள்ளார். இதனை வேறு விதமாகச் சொன்னால் அருட் செல்வம் என்று கூறலாம்.

இந்த அருட்செல்வத்தைப் பெறும் முறைகளைக் கூறி நமக்கு வழிகாட்டுவன திருமுறைகள் இவைமிகப்பரந்தன இவற்றுள் இந்நூலாசிரியர் தாம் படித்து அனுபவித்த சில பாடல்களை மற்றையோரும் அனுபவிக்கவேண்டுமென்ற நல்நோக்கோடு இந் நூலை வெளியிட்டுள்ளார்.

'உள்ளம் கவர் கள்வன்' என்னும் ஞானசம்பந்தர் தேவாரத்துடன் ஆரம்பமாகும் கட்டுரைத்தொடரில் பல கருத்துமிக்க தேவாரங்களைத் தெரிந்தெடுத்து அவற்றின் சிறப்புகள் விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பதிகம் பாடப்பட்டதின் வரலாறு, பாடப்பட்ட தலத்தின் சிறப்பு அந்தப் பதிகம் நமக்குப் பயன்படுமுறை என்பன விளக்கப்பட்டுள்ளன.

"உயிரின் கருவி உடல் இந்த உடலாகிய கருவியைக் கொண்டு உயிர் உய்யும் வழியில் வாழ்க்கை நடத்தவேண்டும்' எனக் கூறும் ஆசிரியர் அதற்கு மேற்கோளாக 'ஆக்கையால் பயனென்' என்னும் நாவுக்கரசர் தேவாரத்தை எடுத்துக் காட்டியிருப்பதுபொருத்தமுடையது.

"தேனில் எப்பகுதியைச் சுவைத்தாலும் அது தேன் தான். அதே போலத் திருவாசகத்தில் எப்பகுதியைச்சுவைத்தாலும் அன்பின் உருக்கத்தைக் காணலாம்'' என்று கூறிபோப் திருவாசகத்தை மொழிபெயர்த்த காரணத்தை விளக்கிக் கூறுகிறார், "ஒரு மகாகவி தீர்க்கதரிசியுமாவான், ஒருமகா பக்தன் ஓதாதுணர்ந்த உயர் ஞானியாகவும், உண்மைக் கவியாகவும் விளங்குதல் கூடும்'' என்று பக்திச் சுவையோடு கவிச்சுவையையும் கலந்து ஒப்பிட்டுக்காட்டுகிறார்.

"இறைவன் நாமமே சிந்தை செய்தால் இடர் கெடும்" எனக் கூறி இறைவன் நாம மகிமை விளக்கப்படுகிறது. தாயினும் நல்ல தலைவர் என்னும் திருகோணமலைப் பெருமையை விளக்கும் முப்பத்திரண்டாவது கட்டுரையுடன் நிறைவுபெறும் இந்த நூல் உண்மையில் ஒரு செல்வமே.

"திருமுறைச் செல்வத்தின் ஆசிரியர் பல வகையிலும் பாராட்டுக்குரியவர். அவர் வழங்கும் இவ்வருஞ் செல்வம் "பலருக்கும் நன்கு பயன்படுவதாகுக'' என்று ஸ்ரீ கி. லட்சுமண ஐயர் முகவுரையில்கூறியிருப்பது மிகவும் பொருத்தமானதே.

முகப்புப் படம் புத்தக நோக்கத்திற்கமைய சிறப்பாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளது

—வ, குகசர்மா

# ஸ்ரீவித்யாகலப்புத்திருமணம் மாப்பிள்ளை கிறிஸ்தவர்!

(நமது சென்னை நிருபர்)

அபூர்வ ராகங்கள் உட்பட பல்வேறு தமிழ்ப்படங்களில் நடித்திருப்பவர் ஸ்ரீவித்யா. இவர் ஜார்ஜ்தாமஸ் என்ற மலையாளப்பட அதிபரை மணந்துகொண்டார். இத்திருமணம் 19-ம் திகதி வியாழக்கிழமை அன்று பம்பாயில் நடைபெற்றது. நடிகை ஸ்ரீவித்யா பிராமண குலத்தைச் சேர்ந்தவர். ஜார்ஜ் தாமஸ் மலையாள மொழி பேசும் கிறிஸ்தவர். இவரை மணந்துகொள்வதற்காக ஸ்ரீவித்யா கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டார். திருமணம் பம்பாயில் கிறிஸ்தவமதச் சடங்குகளின்படி மாதாகோவில் ஒன்றில் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு ஆரம்பத்தில் ஸ்ரீவித்யாவின் குடும்பத்தினர் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். இவரது தாயார் பிரபல பாடகி எம். எல். வசந்தகுமாரி இத்திருமணத்திற்கு இசைவு தரவே இல்லை. ஆனால் ஸ்ரீவித்யா ஜார்ஜ் தாமஸைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று பிடிவாதமாக இருக்கவே வேறு வழியில்லாமல் சம்மதித்தனர்.

ஜார்ஜ் தாமஸ் தீக்கனல் என்ற மலையாளப் படம் ஒன்றை எடுத்தார். [தமிழில் வெளியான தீபம் படக்கதை] அப்படத்தில் நடிக்கும் போதுதான் இருவருக்கும் காதல் மலர்ந்தது. இது பற்றித் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் அவ்வப்போது செய்திகள் வந்தபோதெல்லாம் ஸ்ரீவித்யா மறுப்புத் தெரிவித்துவந்தார். ஆனால் பத்திரிகைகள் சொன்னது உண்மையென்று மெய்ப்பிக்கும் வகையில் திருமணமும் நடந்துவிட்டது.

இம்மாதம் 26-ம் திகதியன்று சென்னையில் மணமக்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதில் ஏராளமான நடிகர் நடிகைகள் கலந்துகொண்டு ஸ்ரீவித்யாவுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். திருமணத்திற்குப் பிறகு படங்களில் நடிக்கமாட்டேன். நல்ல மனைவியாக அவருக்குச் சேவை செய்வேன் என்று ஸ்ரீவித்யா கூறினார்.

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ, அம்பலவாணர்

தங்க, வர, நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், போன்: 7198.

யாழ்ப்பாணம்; தந்தி: வைரம்

நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர் -ஜெயலலிதா
அரச கட்டளை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30.
சரஸ்வதி சபதம்

Regal (Jaffna)
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனு நாகேஷ்
நடித்த
உத்தரவின்றி உள்ளேவா
புத்தம் புதிய கொப்பி (கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜய.
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

இன்று முதல் குதூகல ஆரம்பம்
மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் - ஜெயந்தி
நீர்க்குமிழி
(புதியபிரதி)

50-வது நாளாக வெற்றி நடை போட்டு ஓடுகிறுள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

ராஜா —யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை
(புதிய பிரதி)

நாலாவது வெற்றிவாரம்
ராணி வி. பீ. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது நடைபெறுகிறது!
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கடைசித்தினம் 31-1-78
எம்.ஜி. ஆரின் அரசிளங்குமரி (புத்தம் புதியபிரதி)
1-2-78 முதல் கே. ஆர். விஜயா
வாயாடி (புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப் படக் காட்சி
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
(பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தான முத்தல்லவோ

வெற்றி நடைபோடுகிறது
ஸிடோ எம். ஜி. ஆர். லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

# தனியே இருந்த மூதாட்டி மர்ம மரணம்!

[யாழ்ப்பாணம்]

தனியே தம்து வீட்டில் வாழ்ந்துவந்த வயோதிப விதவை ஒருவர் மர்மமான முறையில் மரணமாகியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் வடக்கு வீதியில் வசித்துவந்த சூரியலட்சுமி தியாகராஜா 72 வயது என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இறந்தவரைப் பொங்கலுக்குப் பின்னர் எவரும் காணவில்லையென்றும் இவரது உறவினர் ஒருவர் நேற்று அவ்வீட்டுக்கு வந்து பார்த்தபோது துர்நாற்றம் வீசிய நிலையில் அவரதுபிணம் கிடக்கக் காணப்பட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, தோடு ஆகிய நகைகளைக் காணவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்தலவிசாரணை நடத்திய பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

## யாருக்காக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத கவலை. வேதனையுடன் மின்விளக்கைப் பார்த்துக் கூறியது.

'கடமை செய்கிறதின் பெருமை அந்தக் கடமை யாருக்காகச் செய்கிறோம் என்பதில்தான் தங்கியுள்ளது. நீ மனிதருக்காக எரிந்தாய். நான் கடவுளுக்காக எரிந்தேன். கடவுளுக்காக வாழ்ந்தவள் நான்—'

பெருமையுடன் கூறிக்கொண்டு இறப்பை நோக்கி அணைந்துகொண்டிருந்தது குத்துவிளக்கு.

(யாவும் கற்பனை)

## சிறுகதை

3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் பரிதாப ஓலத்திற்குச் சாதகமாக—

'விபத்தினுலேற்பட்ட தற்செயல் மரணம்' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கூடி நின்றவர்கள் தங்களுக்குள் ஏதோ கிசுகிசுத்துக்கொண்டார்கள். எதையுமே சாவித்திரி பொருட்படுத்தவில்லை.

(3)

மரணச் சடங்கு முடிந்து அநேகமாக எல்லோருமே போய்விட்டார்கள்.

சாவித்திரி ஒரு மூலையிலிருந்து விம்மி வெடித்துக்கொண்டிருந்தாள்.

சிவராமன் அருகே வந்து 'சாவி' என்றுன். அவளுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

சித்திரவதைக் குட்பட்ட பயங்கரவாதக் குற்றவாளி போன்று ஒன்றுமே தோன்றுதவனுய் பரிதாபமாக நின்றுன் சிவராமன்.

இக்கட்டான நிலையிலிருந்து கணவனைக் காப்பாற்றிவிட்டாலும், அவள் தாயுள்ளம் குழந்தையின் பிரிவுக்காக ஏங்கித் தவித்தது.

'சாவி... சாவி... என்னுடன் பேசமாட்டியா சாவி...நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக நான் எதையாவது செய்யத்தான் போகிறேன் சாவி...சிறைத் தண்டனையை விடக் கொடுமையான தண்டனையை நீ எனக்குத் தந்துவிட்டாய் சாவி. என்னேடு ஒரு வார்த்தையாவதுபேசுசாவி...' அவன் பாகாக உருகினுன்.

அவள் நெடுமூச்சு விட்டாள்.

'அத்தான்...'

'...ம்...'

அவனிடமிருந்தும் ஒரு நெடு மூச்சு.

'இறந்த ஒரு பிள்ளைக்காக இருக்கின்ற பிள்ளைகளை அனுதையாக்கவோ உங்களை மானபங்கப்படுத்தவோ என்னுல் முடியவில்லை அத்தான். இனியாவது நீங்கள் முந்தின மாதிரி மாறிவிட்டால் அதைவிடச் சந்தோஷம் எனக்கு வேறென்ன வேண்டியிருக்கு..?'

கலங்கிய கண்களை மெல்லத் துடைத்துக்கொண்டாள் சாவித்திரி.

'சத்தியமா நான் இனிக் குடிக்கமாட்டேன் சாவி!' என்று சாவித்திரியின் தலையிலடித்த சிவராமன், கண் மூடித் திறக்குமுன் மேசையிலிருந்த கத்தியை எடுத்து தனது இடது கையில் படாரென்று வெட்டிவிட்டான்.

'ஐயோ... அத்தான்!'

குபு குபுவெனப் பாய்ந்த இரத்தத்தைப் பார்த்த சாவித்திரிக்கு முகமெல்லாம் வியர்த்துக்கொட்டியது.

'என் பிள்ளையின் நினைவாக இந்தக் காயம் என்னைத் திருத்திக்கொண்டிருக்கும் சாவி?'— அவன் வெகு சாதாரணமாகக் கூறிச் சிரித்தான்.

[யாவும் கற்பனை]

## மதம், மொழியால் வேறுபட்டாலும்

# "கலை உணர்வால் நாம் வேறுபட்டவர்களல்ல''

— கல்வி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

''மதத்தாலும், மொழியாலும் நாம் இந்தநாட்டில்வேறுபட்டிருந்தாலும், இசை, நடனம் போன்ற கலையுணர்வால் நாம் வேறுபட்டவர்களல்ல''

இவ்வாறு யாழ். வீரசிங்க மண்டபத்தில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு.ரி மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வருடாந்தக் கலைவிழாவில் பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டுஉரையாற்றிய கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்ன கூறினுர்.

இங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் பூஜா நடனத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, பரத நாட்டியம், தமயந்திசுயம்வரம் போன்ற ஆண் பெண்களின் கலாச்சாரத்தை படம்பிடித்துக்காட்டத்தக்கனவாக அமைந்தன.

சரஸ்வதி விவேகத்தின்தெய்வம் மட்டுமல்ல நுண்கலைகளின் தெய்வமும் ஆவாள். இங்கு இடம்பெற்ற அருமையான நிகழ்ச்சிகளின் மூலம் நீங்கள் கலைத் தெய்வத்திற்கு அஞ்சலி செலுத்தியுள்ளீர்கள்.

மிகப்புராதன தொடர்புகள் இந்த நிகழ்ச்சிகளின் மூலம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. இராவணன் சிங்கள-தமிழ் இனங்களுக்கும் பொதுவானவன், வீணைக்கொடியையுயர்த்தியவன்- நாம் மதத்தாலும் மொழியாலும் வேறுபட்டிருந்தாலும் இசைமீதுநாம்கொண்டிருக்கும் காதல்வேறுபாடானதல்ல. தெய்வங்கள் கீழிறங்கி வந்து நடனமாடுகின்றபோது கடல்கள் கொந்தளிக்கின்றன. காற்றுக்கள் புயலாகக்கிளம்புகின்றன. இத்தகைய இயற்கைச் சீற்றங்களை இந்த நிகழ்ச்சிகள் நமக்குக் காட்டுகின்றன.

உணர்ச்சிகள் தணிக்கப்பட்ட பின் கடல் தணிகிறது. காற்று குறைகிறது. எல்லாம் அமைதி அடைகின்றன. மனிதன் மட்டும் மேலே நோக்குகின்றுன். அவன் ஒரு புதிய-புனிதமான வாழ்க்கை முறையைக் கொண்டான். அந்த வாழ்க்கையான்து ஒற்றுமையும். அமைதியும்நிறைந்ததாக அமைந்துள்ளது. இந்த நுண் கலைகளின்நோக்கமேஅதுதான் என்றார். (கா)

## அமெரிக்காவில் பனிப்புயல்

வாஷிங்டன், ஜன 28

மத்திய மேற்கு அமெரிக்காவில் நேற்று அதிவேகமாக வீசிய பனிப்புயலில் ஆயிரத்துக்குமதிகமானோர் சிக்கியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

வீதியில் வாகனங்களில் சென்ற ஆயிரக்கணக்கானோர் இப் புயலில் அகப்பட்டுள்ளனர் என்றும் இதுவரை 12 பேரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன் என்றும் அறிவிக்கப்பட்டது.

80 மைல் வேகத்தில் வீசிய இப் புயலினுல் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. (இ)

## காந்திஜி...

[4ம்பக்கத் தொடர்ச்சி]

பிக்கை இருந்தது. 1958-ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அன்று [அதாவது காந்திஜி இறந்த 10-வது வருடம்] ஒரு கடிதத்தில் ராஜேந்திர பிரசாத் பின்வருமாறு எழுதியிருந்தார்.

'எனக்கு இன்று காந்திஜியின் கையினுல் எழுதிய கடிதங் கிடைத்தது. பேப்பர்-பேனு இவைகள் என் கையில்தான் இருந்தன. இந்தக் கடிதம் அவர் மரணத்திற்குப் பிறகு இன்று எழுதப்பட்டது. இதைப் பாதுகாத்துவருகிறேன். ஆனுல் நம்பிக்கை இல்லாதவர்கள் நான் கூறுவதை நம்பமாட்டார்கள்.' [அதாவது காந்திஜியின் ஆவி இவர் கைமூலம் எழுதியதையே குறிப்பிடுகிறுர்.]

மேற்கண்ட விஷயம் ராஜேந்திர பிரசாத்திற்கு காரியதரிசியாக இருந்த திருமதி தர்பார் எழுதிய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நேர்முகப்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாகக் கொண்டு விளம்பரப்படுத்தவேண்டும்.

4. நீண்டகாலமாக வேலையின்றி இருப்பவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கக்கூடிய முறையில் வயதெல்லையில் இருப்பவர்களுக்கு ஒரு குறிக்கப்பட்ட தொகைப் புள்ளிகள் மேலதிகமாக வழங்கப்பட வேண்டும்.

5. நேர்முகப் பரீட்சைகளை அந்தந்த மாவட்டங்களிலேயே கூடியளவில் நடத்தினுல் பிரயாணத்திற்கென் விண்ணப்பதாரிகள் விரயமாக்கும் செலவு மிச்சமாகும்.

RIO Daily 4 Shows
ROD TAYLOR
in
PARTIZAN
விடுதலை விரும்பிய யூகோஸ்லாவிய மக்கள் நாஸி ஜெர்மனிக்கு எதிராக நடத்திய ஜீவமரணப் போராட்டம்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
கல்யாணமாம் கல்யாணம்

# ஜேஆர்பதவிஏற்கும்வைபவ ஏற்பாடுகள் ஜரூர்

(கொழும்பு)

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவம் தொடர்பான சகல ஏற்பாடுகளும் ஜரூரடைந்துவருகின்றன

காலிமுகத்திடலில் பெப்ரவரி 4 ம் தேதி நடைபெறவிருக்கும் பதவியேற்பு வைபவத்துக்கான பந்தல்கள், மற்றும் அமைப்புவேலைகள் நடைபெற்றுவருகின்றன.

தேசியஅரசுப்பேரவைக் கட்டடத்துக்கு முன்பாக பெருப் நீரூற்று ஒன்றின் நிருமாண வேலைகள் நடைபெறுகின்றன பேரவைக் கட்டிட முகப்பில் உள்ள அரச முத்திரையும் புதிதாக வர்ணம் தீட்டப்படுகிறது.

மறுநாள் கண்டியில் நடைபெறவிருக்கும் வைபவங்களுக்கான ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன,

அமைச்சர்களின் பதவியேற்பு வைபவம் கண்டியில் நடைபெறுவதுடன் ஜனாதிபதி திரு ஜே ஆர் அன்று கண்டி தலதாமாளிகையின் சரித்திர பிரசித்திபெற்ற எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு தனது சரித்திரமுக்கியத்துவம் பெறப்போகும்முதவாவது உரையை நிகழ்த்துவார்.

கண்டியில் நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளில்பெருமளவு தமிழ் கலைஞர்களும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்

இதற்கிடையில் நாட்டில் எவ்விதஅசம்பாவிதங்களுக்கும் இடமளிக்காதவகையில் முப்படைகளும் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஆட்சியிலான புதியஅமைச்சரவையில் தற்போதைய அமைச்சர்களே அங்கம் வகிப்பரெனினும் ஒருவாரகாலத்தில் சில அமைச்சுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ள வேளை திரு ஆர். பிரேமதாசா பிரதமராகும் பட்சத்திலும் அவரே வீடமைப்பு நிருமாண அமைச்சுகளையும் வைத்திருப்பாரென்றும் தெரிகிறது.

மாவட்ட அமைச்சர் நியமனங்கள், தொகுதி நிர்ணயக்குழு புதிய மாவட்டங்கள் பற்றிய சிபார்சுகளை அளித்த பின்னரே வழங்கப்படவுள்ளன.

முற்றிலும் புதிய அரசியலமைப்பும் உருவாக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. )ம)

## "எமக்கு மட்டும் ஏன் விசேஷபடி இல்லை?"

(யாழ்ப்பாணம்)

மேலதிக நேரவேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு உதவிபுரிந்தும்,தமக்கு விசேஷபடி கிடைக்கவில்லையே என்று கூட்டுறவு ஊழியர்களும், அரசாங்க உத்தரவுபெற்ற விநியோகஸ்தர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளம் யாழ்ப்பாண பட்டணக் கிளைச் செயலாளர் திரு. அ. இலட்சியபூபதியும், யாழ் மாநகர அரசாங்க உத்தரவு பெற்ற விநியோகஸ்தர்கள் சங்கச் செயலாளர் திரு. எஸ். சதாசிவமும் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"சென்ற மாதம் 12-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதிவரையும் பங்கீட்டுப்புத்தம் கொள்வோரின்வருமான ஆய்வுக்கான படிவங்களை உத்தியோகஸ்தர்கள் விநியோகிப்பதற்காக காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை கடைகளைத் திறந்து வைத்து, உத்தியோகஸ்தர்களுக்கு சகல வசதியும், பிரதான குடியிருப்பாளரை அடையாளம் காண உதவியும் செய்யும்படி பணிக்கப்பட்டு அப்படியே செய்யப்பட்டது. இதற்காக எமக்கு எந்தவித கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை. (தொடர்ந்தும் இம் மாதம் 18-ம் திகதியிலிருந்து 28-ம் திகதி வரை முன்னரைப் போல் வேலைசெய்யப் பணிக்கப்பட்டுள்ளோம். தொடர்ந்தும் இந்தநிலை நீடிக்கப்படலாம்.

மேலும் அரிசிப் பங்கீட்டுப் புத்தக இடாப்பின் பிரதிகளை 24 மணித்தியாலங்களுக்குள் நிரப்பித் தருமாறும் பணிக்கப் பட்டனர்.

இவற்றையெல்லாம் செய்தும் பங்கீட்டுப்புத்தக மீளாய்வு வேலைசெய்யும் உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கும் படி தமக்கும் கிடைக்கவில்லையே என கூட்டுறவு ஊழியர்களும் உத்தரபெற்ற விநியோகஸ்தர்களும் தெரிவிக்கின்றனர். (கூ)

# வயோதிபர் கொலை!

## மூவர் மீதுதேடுதல் வேட்டை

(நெல்லியடி)

மாடுகளை மாற்றிக்கொள்வதற்காக சென்ற வயோதிபர் ஒருவர் படுமோசமாகத் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் பருத்தித்துறை பொலிஸ் பகுதியில் புலோலிப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இவ்வாறு பரிதாபகரமாக மரணமடைத்தவர் வல்லியப்பர் கிருஷ்ண பிள்ளை என்பவராவார்.

விலா எலும்புகள் முறித்த நிலையில் பல காயங்களும் இவர் உடம்பில் இருந்தன. இக்கொலைபற்றி பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ரி. குணரட்னம் சார்ஜன்ட் செ. மாணிக்கராஜா ஆகியோர் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

இவருடன் நெருங்கிப்பழகியவரும் கடையியாக காலஞ்சென்றவரை அழைத்து சென்றவர் என்று கூறப்படுபவருமான விஜயகமூர்த்தியையும் இன்னொரு 3 பேரையும் பருத்தித்துறை பொலிசார் தேடி வருகின்றார்கள் விரைவில் இவர்கள் கைதாகலாம் என பொலிசார் தெரிவித்தனர். பொலிஸ் விசாரணையில்தெரிய வந்துள்ள விபரம் வருமாறு:-

25-ம் திகதி காலஞ்சென்ற வல்லியப்பர் கிருஷ்ண பிள்ளை வீட்டில் இருந்தாராம் விஜயகமூர்த்தி என்பவர்வந்து மாடுகளை மாற்றுவம்எனச் சொல்லி காலஞ்சென்றவருடனும் அவரின் மாட்டு வண்டியில் சென்றார்களாம். மறுநாள் விடியற்காலை 2 மணியளவில் காலஞ்சென்றவர் வண்டிலில் படுத்திருக்க விஜயகமூர்த்தி வண்டிலை வீட்டிற்கு கொண்டுவந்து மாடுகளை தொழுவத்தில் கட்டிவிட்டு காலஞ்சென்றவரை எழுப்ப வேண்டாம் என வீட்டில் சொல்லிவிட்டு அவர் தலைக்கு தலையணையும் வைத்துவிட்டுச் சென்றாராம். விடிந்ததும் அவரை எழுப்பியபோது அவர் இறந்திருக்கக் காணப்பட்டாராம்.

பொலிசார் விஜயகமூர்த்தியை விசாரணைக்காக தேடியபோது அவர் தலைமறைவாகிவிட்டார். விஜயகமூர்த்தி காலஞ்சென்றவருடன் நெருங்கிப் பழகிவந்த நபரெனவும் பொலிசார் நம்புகின்றனர்.

சன்சயின்
அரைபார்சோப்
இன்றே
கேட்டுவாங்குங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

## ஐக்கிய இலங்கை

1-பக்கத் தொடர்ச்சி

தார். அந்த மகானுடைய இவ்விழாவில் அவரது இலட்சியத்தைப் பின்பற்றி, இன, மத மொழி எல்லைகளைக் கடந்து ஐக்கிய இலங்கையை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும்.

### அமிர் பேச்சு

எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

இந்தியாவில் தேசியத் தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்றவர்கள், இந்தியா ஒரே நாடு என்று கூறிவந்த சமயம், இந்தியாவில் இரு தேசிய இனங்கள் உண்டென்றும், இந்து சமுதாயமும், முஸ்லிம் சமுதாயமும் தனித்தனியாக வாழ்கிறதென்றும், இந்தியாவின் வட மேற்கும் பகுதியில் சுதந்திரத் தனி நாட்டை அமைக்க வேண்டுமென்ற கருத்தை முதன் முதலில் வெளியிட்ட அரசியல் ஞானி அல்லாமா இக்பாலாகும், அவர் கண்ட கனவு பின் பாகிஸ்தானாக மலர்ந்தது.

யாழ்ப்பாண எம், பி. திரு. வி. யோகேஸ்வரன், யாழ் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ எல் விஜயபாலா, திரு. வி. பொன்னம்பலம் நீதிபதி ஜனாப் எம் எம் அப்துல் காதர். திரு சுவித்தியானந்தன் உட்பட மற்றும் பலரும் பேசினர் (க)

## நெல்லியடியில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

எம். பி. திரு. ரி. ராஜலிங்கம் அவரை பிணையெடுத்துச் சென்றார்.

இதேசமயம் நெல்லியடிச் சந்தியில் இருந்து கரவெட்டி நாரதிய பௌத்த வித்தியாலயத்திற்கு அமைச்சர் மாலை சூட்டி ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

## யாழ். தொழில்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

காங்கேசன்தொகுதி அமைப்பாளர் திரு. எஸ். சிவராசா சாவகச்சேரி அமைப்பாளர் என். தில்லைநாதன் வடபகுதி கல்விஅதிபதி திரு ரி. மாணிக்கவாசகர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். [இ]

அமரர் ஜி. ஜி. நினைவு தினம்

# பெப். 9ல் கொடி தினம் அனுஷ்டிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட இருக்கும் மணி மண்டபத்திற்கு நிதி சேர்ப்பதற்காக பெப்ரவரி 9-ம் திகதி கொடிதினம் அனுஷ்டிப்பதாக நேற்றுநடந்த ஜி. ஜி. ஞாபகார்த்த குழுக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

வண்ணார்பண்ணை தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணி காரியாலயத்தில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ், தமிழ காங்கிரஸ் வாலிபமுன்னணி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பெப்ரவரி 9-ம் திகதி குருநகரில் அமரர் ஜி. ஜியின் சிலை ஒன்று திறப்பதென்றும் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைப்பதென்றும், யாழ். பொதுசன நூலகத்தில் அமரர் ஜி. ஜி. யின் வெண்கலச் சிலைக்கு, பிரதமராகவிருக்கும் திரு. ஆர். பிரேமதாசாவைக் கொண்டு அடிக்கல் நாட்டுவதென்றும் யாழ். முற்றவெளியிலும் மற்றும் தொகுதிகளிலும் அஞ்சலிக் கூட்டங்கள் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [க]

## சைக்கிளில் வந்தவர் தாக்கி பல்லை உடைத்தாராம்

(வேலணை)

நீதிமன்றத்திற்கு சென்று திரும்பி வீட்டிற்கு போன கணவனையும் மனைவியையும் தாக்கி பல்லை உடைத்ததாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் ஒருவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இச்சம்பவம் காரைநகரைச் சேர்ந்த ஊரிக்காடு என்ற இடத்தில் நடைபெற்றிருக்கின்றது. வைரவன் நல்லையா [வயது 38] அவரது மனைவி தங்கம்மா ஆகியோரை கே செல்வராசா என்பவர் சைக்கிளில் வந்து தாக்கியதாக புகாரில் கூறப்பட்டுள்ளது. பல் உடைக்கப்பட்ட நல்லையா என்பவர் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

## திறப்புக்கோர்வை யாருடையது?

சத்திரத்துச் சந்தியில் திறப்புக்கோர்வையொன்றை லங்கா செக்குரிட்டி சேவையைச் சேர்ந்த திரு. ந. சந்திரமோகன்; வி. த. தங்கேஸ்வரன் ஆகியவர்கள் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளனர். உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## இருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

கரையூர் மணி துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக குருநகரைச் சேர்ந்த இருவரை கரையூர் பொலிசார் விசாரணையின் பொருட்டு கைது செய்து காவலில் வைத்துள்ளனர்

குருநகர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு எச் எம் ஜி ஹேவா தலைமையில் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்

இதேவேளையில் கரையூர் மணியின் சடலம் பிரேத பரிசோதனையின் பின் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை மரணவிசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது (இ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம். நினைவு ஆலோசனைக் கூட்டமொன்று இன்று மாலை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்திற்கான ஒழுங்குகளை சட்டத்தரணி நா. சங்கரப்பிள்ளை கவனித்துள்ளார். (கெ-இ)

## சமயதீட்சை

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு புதருளை சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று காலை சிவஸ்ரீ மறைக்காட சிவாசாரியார் தலைமையில் சமய தீட்சை நடைபெறும். [இ]

### இந்தியா-ஆஸி.டெஸ்ட்:

## ஆஸி. 353-5 யாலோப் 121

அடிலெட்ய், ஜன. 28

ஆஸ்திரேலிய இந்திய 5 வது இறுதி டெஸ்டின் முதலாவது நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் ஆஸ்திரேலியக் கோஷ்டி 5விக்கட் நஷ்டத்திற்கு 353 ஓட்டங்களைப்பெற்றிருந்தது

உதவி காப்டன் கிரகெம் யாலோப் 121 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்ட நேரஇறுதியில் காப்டன் சிம்சன் 54 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தார்

சந்திரசேகர் 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். [இ]

## துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

[மட்டுவில்]

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டுசம்பவத்தில் கிருஷ்ணசாமி என்பவர் காயத்திற்குள்ளானார்.

காயமடைந்தவர் உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சாவச்சேரி பொலிஸைச் சேர்ந்த திரு. என். குகதாசன் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியினர் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகத்தின்பேரில் தெய்வேந்திரன் என்பவரை பொலிஸ் தேடிவருகின்றனர். [ச]

## கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவியேற்கும் பெப்ரவரி 4-ம் திகதி வைபவத்தை சாவகச்சேரி தொகுதியில் கொண்டாடுவதென சாவகச்சேரி ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மீசாலையிலுள்ள, ஐக்கிய தேசியக்கட்சிக் கிளை காரியாலயத்தில் ஆசிரியர் ஏ. தில்லைநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் அன்றையதினம் கோவில்களில் விசேட வழிபாடு நடத்துவதென்றும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவதென்றும் அன்று மாலை மீசாலையில் கூட்டமொன்றை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸெவின்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu: Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.